விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 28 செவ்வாய்க்கிழமை (12.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 24

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரம் பொறுப்புக் கூறும்!

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

கௌரவமான சமாதானத்தினை ஏற்படுத்துவதற்காக சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி பெருபாலானோரின் இணக்கத்துடன் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையில் திருத்தம் செய்வதாகவும் நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் பொறுப்புச் சொல்லும் பதவியாக மாற்றுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகிந்த சிந்தனை தொலைநோக்கு என்ற பெயரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டது. இதில் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது உட்பட (15ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு சாத்தியமில்லை!

### சிவசக்தி ஆனந்தனிடம் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டே அரசியல்வாதிகள், உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என தெரிவிக்கின்றார்களே தவிர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அனுமதியின்றி உள்நுழையவே முடியாது என படைத்தரப்பு தம்மிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

### சம்பந்தன்–சரத் பொன்சேகாவுக்கிடையில் உடன்படிக்கை கைச்சாத்தாகவில்லை–மங்கள

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், எதிர்க் கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அரசாங்கத்திற்கு ஆதரவான சில ஊட கங்களில் தமக்கும் ஜெனரல் சரத் பொன்சேகா விற்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.(ச-5)

### விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அடுத்தவாரம் விடுதலை

#### உண்ணாவிரதத்தைக் கைவிடக் கோருகிறார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

வழக்குகள் எதுவும் இன்றி சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் சந்தேகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வர்களும். அடுத்த வாரம் விடுதலை செய்யப்படுவார்கள் என்று சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

எனவே தற்போது சிறைகளில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் தமது போராட்டத்தை கைவிடுமாறு சட்டமா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மிகக் குறைந்த (16ஆம் பக்கம் பார்க்க)

### காணாமல் போனோரை மீட்டுத்தருவதாகக்கூறி யாழில் கப்பம் பெற்ற குழுவுடன் தொடர்புடைய பெண் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனவர்களை மீட்டுத் தருவதாகக் கூறி கப்பம் பெற்ற குழுவுடன் தொடர்புடைய பெண் ஒருவரை யாழ். மாவட்ட விஷேட குற்ற விசாரணப்பிரிவு பொலிஸார் வவுனியாவில் வைத்து கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, (16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எடுத்த முடிபுக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல வரவேற்பு

### துரைரட்ணசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிபை யாழில் பல்வேறு தரப்பினரும் வரவேற்றதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்ட எமது கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற (16ஆம் பக்கம் பார்க்க)

### தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று செவ்வாய்கிழமையும் நாளை புதன்கிழமையும் நடைபெறும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள் ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்து விட்டதாக தெரிவித்துள்ள திணைக்களம், இந்த இரு நாட்களுக்குள் வாக்களிப்பதற்கு தவறுகின்ற (16ஆம் பக்கம் பார்க்க)

### ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தை பிணையில் விடுதலை செய்ய அனுமதி



(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர் திஸ்ஸநாயக்கத்தை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம் திஸ்ஸநாய கத்திற்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துதீர்ப்பு வழங்கியிருந்து. பயங்கரவாதத்தை தூண்டும் வகையில் செய்தி (16ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியின் பாரியார் சிராந்தி நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

#### மகளிர் அமைப்புக்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜப்ஷவிற்கு ஆதரவாக பிரசார நடவடிக்கையை அவரது பாரியார் சிராந்தி ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டார். யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட சிராந்தி ராஜபக்ஷ யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மகளிர் அமைப்புப் பிரதிநிதிகளை சந்தித்து அவர் உரையாடியுள்ளார்.

கடந்த கால (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



யாழ்.மாவட்டத்திலுள்ள 5மாவட்ட நீதிபதிகளும் இடமாற்றம் பெற்று யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஆர்.ரீ.விக்னராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து புதிய பதவிகளைப் பொறுப்பேற்றனர். யாழ்.மாவட்ட நீதிபதியாக ஏ.பிரேம்சங்கரும், மல்லாகம் மாவட்ட நீதிபதியாக கே.அரியநாயகமும், சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக ஜே.பிரபாகரனும், பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக திருமதி ஜோய் மகிழ் மகாதேவாவும், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியாக ஆர்.வசந்தசேனனும் சத்தியப் பிரமாணம் செய்வதைப் படங்களில் காணலாம்.

# சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் தமிழ்க் கூட்டமைப்பு பிரசாரம்

(வவுனியா)

எதிரணிக் கட்சிகளின் பொது வேட்பாளரை ஆதரிக்க முடிபு செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முதலாவது தேர்தல் பிராசாரக் கூட்டத்தை நேற்று வவுனியா நகரில் ஆரம்பித்தது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இத் தேர்தல் பிரசாரக் கூட் டத்தில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என தாம் எடுத்த முடிபு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் மக்கள் வெல்வதற்கு முயற்சிப்பதற்கு மாத்திரமல்ல, வடகிழக்கில் தமிழ் பேசும் மக்களுடைய ஆணை மகிந்த ராஜபக்ஷவிற்கு மாறானது என்பது தெளிவாக வெளிவர வேண்டும். இது எமக்கான அரிய சந்தர்ப்பம்.

இலங்கை அதிகாரத்தினுடைய திசையை நிலைப்பாட்டை முழுமையாக மாற்றி அமைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம். இதனை நாம் இழக்கக்கூடாது.

நீங்கள் ஒவ்வொருவரும் வாக்க ளிக்க வேண்டும். அது ஒரு புனிதமான கடமை. அதிலிருந்து நீங்கள் தவறக் கூடாது.

நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி கண்டு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் கணிசமான உறுப்பினர்களுடன் வெற்றிபெறுவோம்.

மக்களுடைய எதிர் காலத்தில் ஒரு மாற்றம் ஏற்படுவதற்கு வழி பிறக்கும் அதனை நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆட்சி மாற்றம் ஒன்று இச்சந்தர்ப்பத்தில் அவசியமானது என வலியுறுத்தினார்.

கடந்த மே மாதத்தில் மூன்று நாட்களில் நடந்த அவலம் கடந்த அறுபது ஆண்டு காலத்தில் நிகழ்ந்ததில் மோசமானது எனக் குறிப்பிட்ட அவர், மகிந்த ராஜபக்ஷ அரசிற்கு வாக்களித்து அந்த அவலத்தை அங்கீகரிக்கும் படி செய்யக்கூடாது.

நாம் எங்கு சென்றாலும் இந்த ஆட்சியை மாற்றி விடுங்கள் என்று கூறுகின்றார்கள். நாமும் ஆட்சி மாற்றத்தையே விரும்புகின்றோம். எனவே நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதேவேளை இப் பிரசாரக் கூட்டத்தில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன், வினோநோதராதலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எடுத்த முடிபு அவரது தனிப்பட்ட முடிபு எனவும் அவரது முடிபிற்கும் ரெலோ அமைப்பிற்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்தார். (ச-14)

# கொழும்பிலிருந்து யாழ்.வர புறக்கோட்டையில் முற்பதிவு

## போக்குவரத்துச் சபை அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வார இறுதி நாட்களில் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை வண்டிகளில் பயணிப்பதற்கு எதிர்பார்ப்பவர்கள் வாரத்தின் ஆரம்ப நாட்களில் ஆசனங்களை பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்தில் இதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் நடவ, டிக்கைப் பிரிவு பிரதிப் பொதுமுகாமையாளர் லிவ்னிஸ் பமுனுகுல ஆராச்சி தெரிவித்தார். முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்வதற்காக உரிய கட்டணத்திற்கு மேலதிகமாக 50 ரூபாய் அறவிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்வதன் மூலம் வார இறுதி நாட்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைத்துக் கொள்ள முடியும் என அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் தினமும் சுமார் 2ஆயிரம் பேர் பயணிப்பதாக இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கைப் பிரதிப் பொது முகாமையாளர் லிவ்னிஸ் பமுனுகுல ஆராச்சி மேலும் தெரிவித்தார். (ச-3)

# புங்குடுதீவில் மது ஒழிப்பு பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு சவேரியார் ஆலய மாணவர்களினால் மது ஒழிப்பு பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் அமைதி ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது. நேற்று வேலணை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதை விட விழிப்புணர்வு நாடகங்களை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# இருவேறு விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் இருவர் படுகாயம் அடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று காலை 10.30 மணியளவில் மல்லாகத்தில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அதேஇடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை இராசேந்திரம் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். இதேவேளை நேற்று பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்ற சைக்கிள்-டிரக்டர் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் லதீபன் (வயது 18) என்பவரும் படுகாயமடைந்தார். இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (ச-30)

# மேலும் நான்கு கைதிகள் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதிகளில் மேலும் நால்வர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வை.யோகேஸ்வரன்(வயது 26), எச்.ஜதீஸ்வரன் (வயது 23),என்.பேரின்பராஜ் (வயது 21), ரி.டினேஸ் (வயது 25) இவர்களின் உடல் நிலை மிகமோசமாக பாதிப்படைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுடன் 12கைதிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். (ச-30)

# இடதுசாரி முன்னணியின் உறுப்பினர் வல்வெட்டித்துறையில் கைது

## வேலுப்பிள்ளைக்கு அஞ்சலி உரை நிகழ்த்தியதால் கைதாம்!

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தந்தை தி.வேலுப்பிள்ளையின் இறுதிநிகழ்வில் அஞ்சலி உரையாற்றிய இடதுசாரி முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் தர்மசிறி லங்காபேலி வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட அறிக்கை வருமாறு,

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தையார் திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் அஞ்சலி நிகழ்ச்சி வல்வெட்டித்துறையில் நடைபெற்றபோது, இந்த நிகழ்ச்சியில் இரங்கல் உரையை இடதுசாரி முன்னணி சார்பில் அரசியல் குழு உறுப்பினர் தர்மசிறி லங்காபேலி உரையாற்றிக் கொண்டு இருக்கையில், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திடீரென அவ்விடத்திற்கு வந்து ஒலி பெருக்கி இணைப்பைத் துண்டித்ததோடு, சிங்கள பேச்சாளர்கள் இங்கு பேசக் கூடாது என தடைவிதித்ததோடு, லங்காபேலியை கைது செய்து மக்களுக்கு உணர்ச்சியை தூண்டும் விதத்தில் பேசினார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒரு மரண வைபவத்தை கூட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நடத்துவதற்கு அனுமதி அளிக்காத நிலை காணப்படுகிறது. மேற்படி மரண வைபவத்தில் பொலிஸ் அதிகாரி நடந்துகொண்ட விதம் கண்டிக்கப்பட வேண்டும்.

பொலிஸார் சட்டத்தை கையில் எடுத்து மனம் போன போக்கில் நடக்கின்றார்கள். தேர்தல் காலத்தில் இந்நிலை என்றால் சாதாரண நாட்களில் இவர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை ஊகிக்க முடியும்.எனவே இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டும் எது வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே நேரத்தில் வல்வெட்டித்துறைக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு பல தடவை தொடர்பை ஏற்படுத்தியும் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

எனவே இந்த விடயம் தொடர்பாக இடதுசாரி முன்னணிதனது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறது என்றுள்ளது. (ச)

# மாணவர்களுக்கு கண்ணாடி வழங்கல்

மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பான சி.எச்.ஏ அமைப்பின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவ லக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்ணாடி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச-14)


பின்வரும் வேலைகள் செய்வதில் அனுபவமுள்ளவர்கள் தேவை

1. சமையலாள்
2. சமையல் உதவியாள்
3. ரீமேக்கர்
4. உணவு பரிமாறுபவர்கள்
5. றொட்டி, தோசை போடுபவர்கள்
6. சகல சிற்றுண்டி வகைகளும் செய்வதில் தேர்ச்சி பெற்றவர்கள்
7. இடியப்பம், புட்டு தயாரிப்பவர்கள்

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

ஸ்ரீ தாமோதர விலாஸ் சைவ உணவகம்
K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
(C-4202)

# இன்று ஒரு தகவல்

## கடவுளும் மனிதனும்

ஓர் ஊரில் ஒரு நல்ல மனிதர் இருந்தார். அவருக்கு ஒரு சந்தேகம். இந்த உலகத்தில் எல்லா உயிர்களையும் கடவுள் படைத்ததாகத்தானே சொல்கிறார்கள். அப்படி இருக்கும் போது அதில் எதற்காகப் பாகுபாடு?

சிலபேர் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். சிலபேர் மகிழ்ச்சியாக வாழ்வதில்லை. ஏன் இந்த வித்தியாசம்?

இதுதான் அவருக்கு ஏற்பட்ட சந்தேகம். சரி....

இந்தச் சந்தேகத்தை யாரிடம் கேட்பது?

கடவுளிடம் சென்றால் தான் சரியான விடை கிடைக்கும். எப்படியாவது ஒருநாள் கடவுள் காட்சி கொடுத்தால் அப்பொழுது அவரிடம் கேட்கலாம் என்று நினைத்தார்.

இப்படி அவர் நினைத்தவுடன் கடவுள் அவர் முன்தோன்றினார்.

"உன்னுடைய சந்தேகம் என்ன?" என்றார். இவருக்கு இன்ப அதிர்ச்சி. உடனே தன்னுடைய நீண்ட நாள் சந்தேகத்தை அவரிடம் கேட்டார்.

"கடவுளே! உயிர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்காகத்தானே நீங்கள் அவற்றைப் படைத்தீர்கள்.

ஆனால் யாருக்கும் நீங்கள் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகத் தெரியவில்லையே..." என்றார்.

இதற்கு கடவுள் சொன்னார்.

"மக்கள் என்னிடம் எதைக் கேட்கிறார்களோ, அதைத் தானே என்னால் கொடுக்க முடியும்" என்றார். இவருக்கு ஒன்றும் புரியவில்லை.

இதைக் கடவுள் புரிந்து கொண்டார்.

"இதோ பார்... நீ ஒருநாள் என்னுடனேயே இரு... நீ இருப்பது மக்களின்கண்ணுக்குத் தெரியாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். என்னிடம் வருபவர்கள் என்ன கேட்கிறார்கள் என்பதை நீயே கேட்டுக் கொள்"என்றார்.

சரி என்று சொல்லி இவரும் அவருடன் பக்கத்திலேயே இருந்தார். பக்தர்கள் ஒவ்வொருவராக வரிசையாக வந்தார்கள்.

முதலில் ஒருவர் வந்தார்.

"நான் செய்யும் வியாபாரத்தில் எனக்கு ஒரு இலட்சரூபா இலாபம் கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

அடுத்தவர் வந்தார்.

"எனக்கு ஒரு வேலை கிடைக்க வேண்டும்" என்று வேண்டினார்.

இன்னொருவர் வந்தார்.

"இந்த தேர்தலில் நான் ஜெயிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

அடுத்து வந்தவர், "எனக்கு நிறைய நகை வேண்டும்" என்று கேட்டார்.

ஒரு பையன் வந்தான்.

நான் பரீட்சையில் பாசாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

பலர், "பக்கத்து வீட்டுக்காரன் நல்லபடியாக இருக்கக் கூடாது" என்று வேண்டிக் கொண்டார்கள்.

சிலர் வந்து மனைவியின் கொடுமை தாங்க முடியவில்லை என்றார்கள். சிலர் கணவனின் கொடுமை தாங்க முடியவில்லை என்றார்கள். இளம் பெண்கள் விரைவிலேயே திருமணமாக வேண்டும் என்று வேண்டினார்கள்.

அதிகாரி அழியமாட்டாரா என்று தொழிலாளியும், தொழிலாளி பணியமாட்டாரா என்று அதிகாரியும் வேண்டிக் கொண்டனர்.

இப்படித்தான் எல்லோரும் கேட்டார்களே தவிர, இயற்கை கொடுத்திருக்கிற இந்த வாழ்நாளை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் செலவழிக்க வேண்டும் என்று யாருமே கேட்கவில்லை.

இறைவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனிதனைப் பார்த்தார். அந்த மனிதனுக்குப் பதில் கிடைத்து விட்டது.

பேசாமல் புறப்பட்டுச் சென்றார்.

இயற்கையின் நோக்கம் புரியாமல் வாழ்கிற வாழ்க்கை இருக்கே... அது நிம்மதியாக இருக்காது மகிழ்ச்சியாக அமையாது.

ஒரு ஆள் இருந்தான்.

அவனுக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம்.

அவன் பிரியமாக ஒரு மான் வளர்த்தான். ஒருநாள் அது காணாமல் போய்விட்டது. கடவுளிடம் போனான். உரிமையோடு முறையிட்டான்.

"கடவுளே! என்னுடைய மான் காணாமல் போனதற்கு யார் காரணமோ அவன் என் முன்னால் வந்து நிற்க வேண்டும். அவனுக்கு என் கையால் தண்டனை கொடுக்க வேண்டும்" என்றான். இறைவன் தயங்கினான்.

"அது வேண்டாமே!" என்று சொல்லிப் பார்த்தார்.

இவன் கேட்கவில்லை.

"இறைவா! இது உன் பக்தனின் வேண்டுகோள். இதை நிறைவேற்ற வேண்டியது உன் கடமை அல்லவா!" என்றான்.

"நல்லா யோசித்துக் கேள்!" என்றார் கடவுள்.

"யோசித்துத்தான் கேட்கிறேன்" என்றான் பக்தன்.

"சரி! வேறு வழியில்லை. அப்படியே ஆகட்டும். உன்னுடைய மான் காணாமல் போக யார் காரணமோ அவர் இதோ உன் எதிரில்!" என்றார். எதிரே ஒரு சிங்கம் தோன்றியது.

மனிதன் அலறினான் : "கடவுளே! என்னைக் காப்பாற்று! தெரியாமல் கேட்டுவிட்டேன்!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளால் அரச ஊழியருக்கு அவதூறு

(கொழும்பு)

அரசியல் வாதிகளின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களினால் அரச ஊழியர்களுக்கு அவதூறு ஏற்படுவதாக அரசசேவை சார்ந்த முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

பாரிய அளவிலான திட்டங்களை அனுமதிப்பதற்கு முன்னர் கேள்விப்பத்திரம் கோரல், தொழில்நுட்ப அறிக்கை பெற்றுக் கொள்ளல் போன்ற பல நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

பிரதான கணக்கு அலுவலர் என்ற வகையில் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இங்கு பாரிய பொறுப்புக்கள் சுமத்தப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது நியாயமற்றது என அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

காணி அமைச்சின் செயலாளர், துறைமுக சிவில் விமான அமைச்சின் செயலாளர், உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகம் ஆகியோர் தேசிய ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்கள்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அரச சேவை குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சி நிலைய அடைந்திருக்கின்றது.

அதேபோன்று அரசாங்க ஊழியர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்க ஊழியர் ஒருவரின் குறைந்தபட்ச சம்பளமாக காணப்பட்ட 8140 ரூபா என்ற தொகை தற்போது 11 ஆயிரத்து 770 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ளது.

வாழ்க்கை செலவு கொடுப்பனவும் பல சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பது யதார்த்தத்திற்கு புறம்பானது. இதனைப் பெற மக்களிடமிருந்து அதிக வரிப் பணத்தை பெறவேண்டியிருக்குமென அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (2-4)

# போதைவஸ்து, எயிட்ஸ் தொடர்பான அகில இலங்கை கட்டுரைப் போட்டி

சர்வதேச சிங்க சமாஜங்களின் இணையம் - பிராந்தியம் 306 ஏ-2 வருடந்தோறும் நடத்தும் போதைவஸ்து, எயிட்ஸ் சம்பந்தமான நாடளாவிய ரீதியிலான கட்டுரைப் போட்டியை இத்தாலி நாட்டு பெஸ்ரூம் சிங்க சமாஜத்தின் முழு ஆதரவுடன் இந்த வருடம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய இப்போட்டியில் 15 வயது தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்ட சகல பாடசாலை மாணவ, மாணவிகளும் பங்கேற்கலாம் என்றும் ஆக்கங்கள் மும்மொழிகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுரைகள் யாவும் பிராந்திய இணைப்பாளர், 12/3, பிரான்சிஸ் றோட், வெள்ளவத்தை, கொழும்பு -06 என்ற முகவரிக்கு 2010 பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

போதைவஸ்து துஸ்பிரயோகத் தடுப்பில் இளைஞரின் பங்கு.

நல்லொழுக்கமான வாழ்க்கை - வளமான எதிர்காலம் (எச்.ஐ.வி./ எயிட்ஸ்).

ஆகிய இரண்டு தலைப்புகளிலேயே இப்போட்டி நடைபெறும். கட்டுரைகள் ஏ-4 அளவு தாளில் 4 பக்கங்களுக்குக் குறையாமலும் 6 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும்.

அத்துடன் அவை மாணவரின் சொந்த ஆக்கம் எனவும், அவருடைய பெயர், பிறந்த திகதி, வகுப்பு ஆகிய விபரங்களும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒரு மாணவர் இரண்டு தலைப்புக்களின் கீழும் வெவ்வேறாக கட்டுரைகளை அனுப்பி வைக்கலாம் என்று கேட்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு தலைப்பிலும் மூன்று மொழிகளிலும் தனித்தனியாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு தெரிவு செய்யப்படும் கட்டுரைகளுக்கு முறையே தலா 10 ஆயிரம், 5 ஆயிரம், 2 ஆயிரத்து 500 ரூபா பணப்பரிசும் அழகான கேடயமும், சான்றிதழும் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. (2-6)

## இராசி பலன்

12-01-2010
(மார்கழி 28 செவ்வாய்க்கிழமை)
துவாதசி முற்பகல் 8.43 மணிவரை
கேட்டை பின்னிரவு 12.29 மணிவரை
இராகுகாலம் 3.33 - 5.03 மணிவரை
சுபநேரம் 11.03 - 12.33 மணிவரை
பிரதோஷ விரதம், சித்தாமிர்தம்.

| | |
|---|---|
| மேடம் | மனக்கவலை, ஆரோக்கியக் குறைவு, வாகன பயம், முயற்சி தாமதம். |
| இடபம் | மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, விருந்துபசாரம். |
| மிதுனம் | சத்துருஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, போசன சுகம். |
| கடகம் | காரிய இடையூறு, கௌரவக் குறைவு, தொழில் நன்மை, பண விரயம். |
| சிங்கம் | சுபசெய்தி, கல்வியில் ஆர்வம், நல்ல முயற்சி, மனச்சஞ்சலம். |
| கன்னி | இஷ்டசித்தி, மனோதைரியம், சகோதரர் உதவி, போசன நன்மை. |
| துலாம் | மனோசங்கடம், அதிக செலவு, செய்தொழில் விருத்தி, விவாதம். |
| விருச்சிகம் | வெகுமானம், சயன சுகம், தெய்வ தரிசனம், விருந்துபசாரம். |
| தனுசு | பிறருக்கு உதவுதல், மனக்கிலேசம், வேலைச்சுமை, சுபகாரியச் செலவு. |
| மகரம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் வருகை, கீர்த்தி, காரிய நன்மை. |
| கும்பம் | பெரியோரால் மதிக்கப்படுதல், நோய் குணமடைதல், தொழில் நன்மை, சுபசெய்தி. |
| மீனம் | உத்தியோக பங்கம், புதிய திட்டமிடல், பிதாசிந்தை, முயற்சி தாமதம். |

வளவன்

# ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் மொழி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழி வகுப்புக்களை நடத்தத் தீர்மானித்துள்ளது. இதற்கமைய க.பொ.த பரீட்சைக்குத் தோற்றியோரும் தொழில் புரிவோரும் இக்கற்கை நெறியில் சேர முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் க.பொ.த. பரீட்சைக்கு தோற்றவுள்ளோருக்கான பிரத்தியேக வகுப்புகளும் பட்டதாரிகளுக்கான தமிழ், ஆங்கில வகுப்புக்களும் விசேட ஆங்கில வகுப்புக்களும் இடம் பெறும் என்றும் கற்க விரும்புவோர் தலைவர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் 021 222 9673 அல்லது செயலாளர் 0776913333, கீழைத்தேயர் கல்விக் கல்லூரி 223, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (2-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 250 | 260 | 250 |
| தக்காளி | 120 | 130 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 120 | 130 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 230 | 240 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 130 | 140 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 160 | 150 | -- |
| கறிமிளகாய் | 120 | 140 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 130 | 120 |
| கத்தரி தம்புள்ள | 120 | 130 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 100 | 100 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# தேர்தல் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தலில் வாக்கெடுப்பு நிலைய கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்கள்/ வாக்கெடுப்பு எழுதுநர்களாக கடமையாற்ற தகுதிபெற்றவர்களுக்கென நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டு இதுவரை எந்த பயிற்சி வகுப்பிலும் கலந்து கொள்ளாதவர்களுக்கென இன்று பிற்பகல் 2.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் விஷேட பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இதுவரை பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளாதவர்கள் இப்பயிற்சி வகுப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் கேட்டுள்ளார். (சு)

# மகரஜோதி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலய மகரஜோதி பெருவிழாவும் இருமுடி சுமத்தலும் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய ஐயப்ப சுவாமிகள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வடக்கு புறத்தில் அமைந்துள்ள ஐயனார் ஆலயத்திலிருந்து இருமுடி சுமந்து ஐயப்பன் ஆலயத்தை நோக்கி வருகின்ற நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை9.30 மணிக்கு ஐயப்பனுக்கு 108 அஷ்டோத்திர சங்காபிஷேகமும் தொடர்ந்து தீபாராதனைகளும் இடம்பெற்று மாலை 4மணிக்கு 18 படி திருவிளக்கு பூசையும் மகரஜோதி காணும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-4)

# தமிழர் பிரதேசங்களின் புனர்வாழ்வு அபிவிருத்தி தொடர்பான மாநாடு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்த உறவுகளின் உதவிகளைக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரதேசங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான உயர்மட்ட மாநாடு இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் எஸ்.சிவச்சந்திரன், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், கலாநிதி நொயெல் நடேசன், திரு ஏ. சந்திரஹாசன், கலாநிதி என்.நரேந்திரன், பேராசிரியர் எம்.சின்னத்தம்பி, திரு டெரின் கொன்ஸ்டன்டைன், பொறியியலாளர் எம்.இராமதாஸன், பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் விசேட உரைகளை ஆற்றவுள்ளனர் என்றும் நான்கு அமர்வுகளாக நடை பெறும் இந்த உயர் மாநாடு பிற்பகல் 4.30 மணிக்கு நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரிப்பு

(காரைநகர்)

காரைநகர் பிரதான வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக வாகன ஓட்டிகளும் பாதசாரிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட போதும் பிரதான வீதிகளில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது.

வாகனங்கள் ஒலி எழுப்பிய போதும் வீதியை விட்டுவிலகாமல்நிற்பத னால் வாகன ஓட்டிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக வாரி வளவு, ஆலடி, புதுவீதி, வலந்தை பிரதேசங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் சிறுதோட்டங்கள் என்பவற்றையும் சேதப்படுத்தி வருகின்றன.

கட்டாக்காலி கால்நடை தொடர்பாக பிரதேச சபை அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (2-246)

# விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தீவிரமாக பரவி வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்ப டுத்தும் நோக்கில் யாழ் . பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் விஞ்ஞான பீட மாண வர்கள் கடந்த சனிக்கிழமை பல்கலைக்கழக சுற்றுப்புறச் சூழலில் சிரமதானப் பணியிலும் விழிப்புணர்வு நடவடிக்கையிலும் ஈடுபட்ட னர்.

யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் சி.சிவன்சுதன் மற்றும் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையைச் சேர்ந்த டாக்டர் இ.சுரேந்திரகுமார் ஆகியோர் மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்க ஏறத்தாழ 130 மாணவர்கள் 12 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலுடன் பலாலி வீதிக்கும், காங்கேசன்துறை வீதிக்கும் இடைப்பட்ட கந்தர் மடம், பிறவுண் வீதி, யாழ். இந்துக் கல்லூரி வளாகம், கொக்குவில் நூலகப்பகுதி போன்ற இடங்களில் மக்களை விழிப்புணர்வடையச் செய்ததோடு பொது இடங்களில் சிரமதானப் பணியிலும் ஈடுபட்டனர்.

இப்பணியில் பங்குபற்றிய மாணவர்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சமுதாய மருத்துவ துறையைச் சேர்ந்த வைத்தியர்கள், ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்கள் மற்றும் பணியில் ஈடு பட்ட மாணவர்களுக்கான பிஸ்கட்டுக்கள், மென்பானம் போன்றவற்றை வழங்கிய வர்த்தகப் பெருமக்கள் ஆகியோருக்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் தனது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது. (2)

# குன்றும் குழியுமாக காணப்படும் அராலி கிழக்கு - குலனை வீதி

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு -குலனைவீதி கடந்த 40 வருடங்களாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக இருந்து வருகின்றது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் பயணிகள் பலத்த சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதி தற்போது பெய்துவரும் மழை காலத்தில் மேலும் மோசமடைந்து போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுத் தொழிலாளர்கள், பொதுமக்கள் எனத் தினமும் நூற்றுக்கணக்கானோர் பயன்படுத்தும் இவ் வீதியின் முக்கியத்துவம் உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் புனரமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-49)

# சாவ. லயன்ஸ் கழகம் நடத்தும் மாபெரும் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் மாபெரும் பொங்கல் விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவினை முன்னிட்டு காலை 6 மணிக்கு ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, காலை 6.10 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி என்பன யாழ். நகரிலிருந்து ஆரம்பமாகவுள்ளன.

அத்துடன் காலை 6.30 மணிக்கு கைதடியிலிருந்து பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

மேலும் காலை 6.45 மணிக்கு நுணாவில் சந்தி யிலிருந்த ஆண்களுக்கான வேகநடைப் போட்டியும் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரியில் கிறிஸ்மஸ் மரம், கயிறிழுப்பு உள்ளிட்ட மைதானப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் சாவகச்சேரி நவீன சந்தையில் அமைந்த விமலாஸ் வியாபார நிலைய உரிமையாளர் லயன் எஸ்.கே. நவரத்தினமிடமோ அல்லது யாழ்.டேவிட் பீரிஸ் கம்பனியிலோ விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனவும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனியான விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் அன்றைய தினம் பிற்பகல் 6 மணிக்கு கலாசார விழாவும் பரிசளிப்பு விழாவும் தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர்களாக பிராந்தியத் தலைவர் லயன் ஆர். ஜெயபாலன், வலயத்தலைவர் லயன் வி.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)





# டெங்கு ஒழிப்பில் நல்லூர் பிரதேச சபை

(யாழ்ப்பாணம்)

தீவிரமாக அதிகரித்து வரும் டெங்கு நோயினை ஒழிப்பதற்கான திட்டத்தினை அமுல்படுத்தி சுற்றுச்சூழலினை சுத்தமாகப் பேணி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நல்லூர் பிரதேச சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்காக நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் என்ற பெயரில் துண்டுப்பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கியும், மற்றும் புகையூட்டல் செயற்பாடு, வீடுகளில் உள்ள கழிவுப் பொருட்களினை அகற்றுதல், சனசமூக நிலையங்களுடன் இணைந்த சிரமதான பணிகள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் தமது செயற்பாடுகளை அறிவிப்பது போன்றவற்றை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மேலும் நல்லூர் பிரதேச சபை பிரிவில் துப்புரவு செய்யாது இருக்கும் பற்றைக் காணிகளினை சுத்தம் செய்யாது சூழல் பாதுகாப்பு சட்டத்தினை மீறுவோர் மீது நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (30)




வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சீதா சண்முகநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் ஆங்கிலப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி நிற்பதையும், பாடசாலை மாணவி ஒருவர் வரவேற்புரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் மற்றும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் பரு.கிளை முகாமையாளர் திருமதி எஸ்.பிரபாகரன் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அல்வாய் நிருபர்)

# விஜயநகரக் காலச் சிற்பக்கலை

101

நாகலிங்கம் லெபாக்ஷியிற் காணப்படும் மிகப்பெருஞ் சிற்பங்களில் ஒன்றாகும். மூன்று தளமாக அமைந்த நாகத்தின் சுருள்களின் மேல், ஏழு படங்களுக்குக் கீழே யோனியுடன் அமைந்த லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையான நாகலிங்கங்கள் விஜயநகர காலம் முதலாக வழிபடப்பட்டன. கல்யாண மண்டபத்திலே அமைந்திருக்கும் கல்யாணசுந்தரரின் சிற்பம் வனப்பு மிக்கதாகும். திருக்கைலாய மலையிலே கல்யாண வைபம் நடைபெறுவது போன்ற காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. சபையிலே பிரமன், திருமால், முனிவர்கள், அட்டதிக்குப் பாலகர் முதலியோர் அமர்ந்திருந்திருக்கின்றனர்.


சிற்பங்களுடன் கூடிய தூண்கள்.

இங்குள்ள மண்டபங்களிற் கிராத வடிவிலே பன்றியை வேட்டையாடும் சிவன், பாய்ந்து கிராதனைத் தாக்கும் வராகம், சிவனிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெறும் இராவணன், கைகூப்பிய கேலாத்தில் மனித உடலும் மாட்டுத்தலையின் வடிவமும் பொருந்திய நந்திதேவர், அகன்ற கண்களும் மீசையும் அமைந்துள்ள கோலத்துடன் வாளுடன் தோன்றும் வீரபத்திரர், கோரமான பார்வையுடன் வாயைப் பிளந்த வண்ணமாகத் தோன்றும் யோகநரசிங்கனின் சித்திரங்கள் என்பன ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

இவற்றிலே சிறப்பு மிகுந்த சித்திரமாக விளங்குவது ஐந்து முகங்களும் - பத்துக் கரங்களுமுடைய மகாவிஷ்ணு உருவமாகும். கிரீட மகுடங்களையும் பீதாம்பரத்தையும் அடிப்படையாகக் கொண்டு அதனை விஷ்ணுவின் கோலமென்று அடையாளங் காண முடிகின்றது. முன்னிரு கரங்களும் அபய வரத கரங்களாய் உள்ளன. பின்னுள்ள கரங்களிற் சங்கு, சக்கரம், அம்பு, வில், வச்சிராயுதம். உடுக்கை என்பன உள்ளன. மும்மூர்த்திகளிலே தாமே முதலான மூர்த்தி என்ற நிலையில் விஷ்ணு தோன்றுகிறார். திருமாலை "மூவரில் முன் முதல்வன்" என்று **பெரிய திருமொழி** வர்ணிக்கின்றமையுங் கவனித்தற்குரியது. வீரபத்திரன் கோயிலில் விலங்கு வடிவத்திலே காணப்படும் நந்தி ஒரு அலங்கார வேலைப்பாடாகும்.

## தூண்களில் அமைந்த சிற்பங்கள்

விஜயநகர காலத்திலே தூண்களிற் சிறிய சிற்பங்களை வடிக்கும் முறை விருத்தியடைந்தது. பெரியபுராணத்திலே வரும் சிறுத் தொண்டர் கதை, கிராதாரஜுனியக் கதை முதலானவற்றின் அம்சங்கள் தூண்களிலே சிற்ப வடிவங்களாக அமைக்கப்பட்டன. சிறுத்தொண்டருக்குச் சிவன்பிள்ளை வரம் அருள்வது, சீராளனின் பிறப்பு, சிவன் அன்னதானங் கேட்டு வருதல், சீராளனின் தலை வெட்டப்பட்டுள்ளது. வைராகியான சிவன் அன்னமுண்பதற்கு ஆசனத்தில் அமர்தல், சிவன் பார்வதி சமேதராய்க் காட்சி கொடுத்துச் சீராளனை உயிர்மீட்டல், சிறுத்தொண்டருக்கு அருள் புரிதல் போன்ற காட்சிகள் தூண்க ளிலே சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகச் சைவ சமய மரபிலுள்ள சிறுத் தொண்டர் புராணக் கதையினை அடிப்படையாகக் கொண்ட சிற்ப வடிவங்கள் ஆந்திரப் பிரதேசத்திலும் கர்நாடகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

அர்த்த மண்டபத் தூண்களிலே பலவிதமான சிறிய சிற்பங்கள் அமைக்கப்பட்டன. உமாதேவியார், கணபதி, நந்திதேவர் ஆகியோருடன் ஆனந்த தாண்டவம் புரியும் நடராசர், துர்க்கை, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், காலகாலன், சாலபாஞ்சிகை முதலியோரின் உருவங்கள் லெபாக்ஷி முதலிய கோயில்களிற் காணப்படுகின்றன.

### மண்டபங்கள்

விஜயநகர காலத்து மண்டபங்கள் பலவற்றிலே யாழித்தூண்கள் அலங்காரக் கோலத்துடன் அமைக்கப்பட்டன. ஸ்ரீசைலத்து மல்லிகார்ச்சுனர் ஆலயத்தின் பிரமராம்பாள் தேவியின் முகமண்டபம் யாழித்தூண்கள் பொருந்திய ஒரு அலங்கார வேலைப்பாடாகும். விஜயநகரத்து விட்டலசுவாமி கோயில் விரூபாக்ஷர் ஆலயம், ஹஸாரராமர் கோயில் என்பவற்றிலும், வேலூர் சலகண்ட டேஸ்வரம், திருவரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், தாடிக்கொம்பு, திருமுட்டம் ஆகியவற்றிலுள்ள ஆலயங்களிலும் யாழித்தூண்களும் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த தூண்களுங் காணப்படுகின்றன.

ஸ்ரீசைலத்தில் அமைந்துள்ள கோயில் வளாகத்துச் சுற்றுமதில் அதில் அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடுகளின் காரணமாக மிகுந்த சிறப்பினைப் பெறுகின்றது. சிற்பங்களினாற் சிறப்புற்று விளங்கும் திருமதில்களையுடைய கோயில் அங்குள்ளதனைப் போல பரதகண்டத்தில் வேறெங்குங் காணப்படுவதில்லை. அட்டமாசித்தி பெற்ற சித்தர்களின் சாதனைகளை விளக்கும் சிற்பங்கள் காணப் படுவதாற் ஸ்ரீசைலத்துக் கோயில் சித்தர் தலம் எனப்படும்.

ஊர்த்துவரேதகசு என்னும் கோலத்திற் சமண தீர்த்தாங்கரரைப் போலச் சமபாதத்தில் நிற்கும் சிவன், மகிஷமர்த்தினியான அட்டபுய நாயகி க்தாயுதத்தை ஏந்திய கோலத்தில் அமைந்திருக்கும் யோக நரசிம்மர், இலிங்கத்திலிருந்து தோன்றி அக்கமகாதேவிக்கு அருள் பாலிக்கும் கோலமான சிவன் முதலியோரின் உருவங்கள் நுட்பமான வேலைப்பாடுகளாகும்.

திருக்குறுங்குடி, அழகர் கோயில், தாடிக்கொம்பு, விருத்தாசலம், கும்பகோணம், சேரன்மகாதேவி, திருவில்லிபுத்தூர், திருக்கோயிலூர், செஞ்சி, நாங்குனேரி, திருநெல்வேலி, திருவைகுண்டம், வந்தவாசி, அரியலூர், திருக்கண்ணமங்கை, குடுமியான்மலை, சுசீந்திரம், தாரமங்களம், தென்காசி, திருவானைக்கோயில், வால்குடி, திருப்புத்தூர், திருவொற்றியூர், மைலாப்பூர், திருவல்லிக்கேணி, திருப்புவனம் (மதுரை), சிதம்பரம் முதலிய தலங்களில் விஜயநகர கலைப் பாணியில் அமைந்த வேலைப்பாடுகள் உள்ளமை அண்மைக்கால ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவாகியுள்ளது. இத்தலங்கள் சிலவற்றிலே கட்டடங்கள் எல்லாம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. வேறு சிலவற்றிலே மண்டபம், கோபுரம், பிரகாரம் முதலிய அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டன. திருவரங்கம், திருப்பதி, அழகர்கோயில் ஆகியன மிகப் புராதனமான வழிபாட்டுத் தலங்களாகும். ஆயினும் அவற்றிலே காணப்படும் பெருங் கட்டடங்களிற் பல விஜயநகர கலைப்பாணியில் அமைந்தனவாகும். ஆறுபடை வீடுகளிலுள்ள கோயில்களும் விஜயநகரகாலத் திருப்பணிகளாகும்.

புராதன காலத்துக் குடவரைக் கோயில்கள் அமைந்திருக்கும் ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருக்கோகர்ணம், குடுமியாமலை, குன்றாண்டார் கோயில் முதலிய தலங்களில் விஜயநகர காலத்தில் ஆலயங்கள் விரிவாக்கம் பெற்றன. இக் கோயில்களில் மரம், ஆலயங்கள் விரிவாக்கம் பெற்றன. இக் கோயில்களில் மரம், கல், சுதை, உலோகம் என்பவற்றில் அமைக்கப்பட்ட எண்ணற்ற சிற்பங்கள் உள்ளன. இராம காதை, ஹரிவம்சம், பாகவத புராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் முதலியவற்றிலே காணப்படும் கதைகளை ஆதாரமாகக் கொண்டு பெருந்தொகையான சிற்பங்கள் இக் கோயில்களில் அமைக்கப்பட்டுள்ளன.

நரசிம்ம அவதாரத்தின் பல்வேறு கோலங்கள் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தூணிலிருந்து மனித உடலும் சிங்கத்தின் தலையும் பொருந்திய கோலத்தில் நரசிம்மர் வெளிப்படுவதைத் திருவானைக்கா கோயிலிற் காணலாம். நரசிம்மர் இரணியனுடன் சமர் புரிதல், இரணிய சங்காரம், இலக்குமி - நரசிம்மர், அகண்ட பேரண்ட நரசிம்மர், நரசிம்மி முதலிய வடிவங்களைத் திருக்குறுங் குடி விருத்தாசலம் போன்ற தலங்களிற் காணலாம்.

விஜயநகர காலத்துச் சிற்பங்களிலே திருமாலின் தசாவதாரக் கோலங்கள் குறிப்பிடத் தக்கவை. சிருங்கேரி, அழகர்கோயில் ஆகிய இடங்களில் பத்து அவதாரங்களையும் விளக்குஞ் சிற்பங்கள் ஒரே வரிசையில் உள்ளன. மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், இராமவதாரம் ஆகியவற்றின் வடிவமான சிற்பங்கள் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில், மதுரை கூடலழகர் கோயில் ஆகியவற்றில் அமைந்திருக்கின்றன. திருவிளையாடற் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்கள் மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயிலுங் பெரிய புராணக் கதைகளை விளக்குஞ் சிற்பங்கள் தேவிகாபுரத்திலும் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. திருவிளையாடற் புராணத்தில் வர்ணிக்கப்படும் மும்முலைத் தடாதகை சுந்தரேஸ்வரரைப் போருக்கு அழைக்கும் காட்சி மதுரை மீனாக்ஷி அம்மன் கோயிற் புதுமண்டபத்திலே வடிவமைக்கப்பட்டுள்ளது. மும் முலைத் தடாதகை மகிக்ஷமர்த்தினியின் கோலமாகி எருமைத் தலை மேற் காலூன்றி நிற்கும் காட்சி திருப்பரங் குன்றத்துக் கல்யாண மண்டபத்திலே சிற்பக் கோலமாக அமைந்துள்ளது.

மச்ச -கூர்ம -வராக கர்வபங்கமூர்த்தி என வர்ணிக்கப்படும் சிற்ப வடிவங்களை சைவக் கோயில்கள் சிலவற்றிலே காணப்படுகின்றன. சிவன் அல்லது முருகன், மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் ஆகிய அவதாரங்களின் கர்வத்தை அடக்குங் கோலத்தைப் பிரதிபலிக்குஞ் சிற்பங்கள் சில கோயில்களில் உள்ளன. தமது அவதார காரியம் முடிந்தும் சினந் தணியாத உலகில் இடர்புரிந்தமையின் காரணமாகத் திருமால் தண்டனை பெற்று மீட்சி பெற்றார் என்ற கதைகள் காலப் போக்கில் உருவாகின. சரப புராணக் கதைகள் அத்தகையனவாகும். அழகுமலைத் தேரில் முருகன் வராகத்தை வதைப்பதும், மீட்கப்பட்ட திருமால் சங்கு, சக்கரம் என்ப வற்றை ஏந்திய நிலையில் அஞ்சலிபந்தமாக நிற்குஞ் கோலமும் தெரிகின்றது. இதேபோன்ற காட்சியைத் திருவாரூர் முருகன் தேரிலுங் காணலாம். நரசிம்மர் இரணியவதம் புரிந்த மகாதேவர், நரசிம்மரை அடக்குவதற்கென்று தோன்றியவர் சரபமூர்த்தி. சரபத்தில் மானிட அம்சங்களோடு விலங்கு, பறவை என்பவற்றின் அம்சங்களுஞ் சேர்ந்து விடுகின்றன. சீறிய சிங்கம் சரபனிடம் படும் பாட்டைச் சிற்பத்திற் காண்பது விந்தையான காட்சியாகும்.


லொபாக்ஷியில் காணப்படும் நாகலிங்கம்.

திருமால் அவதாரங்களின் எலும்புகளைக் கங்காளமாகக் கட்டிச் சுமந்து செல்பவர் கங்காள மூர்த்தி . சிவன் சரபமாகி நரசிம்மனை அடக்கினானென்று சைவர் கொல்வதால், வைணவர் எட்டுத் தலையுடைய அகண்ட பேரண்ட பறவையாக்கிச் சிவனைத் தண்டிப் பதாகச் சிற்பம் படைத்தனர். இத்தகைய நான்கு வடிவங்களை எம்மால் அடையாளம் காண முடிந்தது. வில்லியனூர் ,கணபதிதேர், திருவில்லிபுத்தூர் ஆழித்தேர், திருவரங்கத்து நரசிம்மன் இளங்கோயில் ஓவியம், திருவரங்கத்துத் தெற்குத் தெரு வீதியிலுள்ள கோபுரத்துச் சுதைச் சிற்பம் என்பவற்றில் அவை காணப்படும்.

அட்டமுக அகண்ட பேருண்ட வடிவத்தில் சிங்கம், புலி, குதிரை, பன்றி, குரங்கு, கழுகு, கரடி ,பாம்பு என்பவற்றின்முகங்கள் உள்ளன. புலி தவிர்ந்த ஏனைய யாவும் வைணவ சம்பந்தமானவை என்பது புராணக் கதைகளால் அறியப்படும் சைவத்துடன் தொடர்புடையதான புலிவடிவம் அட்டமுக அகண்ட பேரண்டத்தோடு சேர்ந்து கொள்வதும் வியப்பிற்குரியதன்று. ஐமுக நரசிங்கனைச்சிவாம்சமாகச் சாத்திரங்கள் கொள்வ துண்டு. ஒவ்வொரு முகத்திலும் சூரியன் , சந்திரன் , அக்கினி ஆகியவற்றின் அடையாளமான முக்கண் அமைந்திருக்கும். இராமரின் உத்தம பக்தனாகிய அனுமானையும் சிவாம்சமாகக் கொள்வர்.

### காமக்கோலங்கள்

இந்து சமய மரபிலே ஆன்மா இறைவனை அடைவதற்கு (1) யோக மார்க்கம் ,(2) போகமார்க்கம் என்னும் இரு வழிகள் உள்ளன என்று கொள்ளப்படும். தவம் , புலனடக்கம், ஞானம் என்பவற்றால் பிரமத்தை அடைவது யோக மார்க்கமாகும். தந்திரமுறையினைச் சாதகன் போகத்திலே மூழ்கிப் பரத்தைக் காண்கிறான். போக மார்க்கத்திற் செல்வோர் மச்சம் , மாமிசம் , மது , முத்திரை , மைதுனம் என்னும் பஞ்ச மகரங்களையும் ஒப்புக் கொள்வர். காபாலிகர் ,காளாமுகர் , சாக்தர் முதலாயினோர் போக மார்க்கத்தில் நின்றனர். வங்கதேசம் , கலிங்கம் , மத்தியபாரதம் ஆகியவற்றிலே பரவியிருந்த தந்திர மார்க்கத்தின் செல்வாக்கு தென்னிந்தியாவிலும் ஏற்பட்டது.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் அமைக்கப்பட்ட சிற்பங்களிலே மைதுனக் கோலங்கள் இடம்பெறவில்லை. ஆனால், விஜயநகர காலத்திற் காம உணர்ச்சிகளைப் பல்வேறு கோலங்களிற் பிரதிபலிக்குஞ் சிற்பங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. முத்தமிடும் காட்சிகள் , ஆலிக்கனத் தோற்றம் , காம உணர்ச்சியால் ஏற்படும் பல வகையான வெளிப்பாடுகள் என்பன சிற்ப வடிவங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் வர்ணிக்கும் புராணக் கதைகள் பல சிற்பக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தொகுத்து நோக்குமிடத்து விஜயநகர காலத்திலே பெருந்தொகையான சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. அவை கடவுட் படிமங்களாகவும் அலங்காரச் சிற்பங்களாகவும் அமைந்தன. புராணங்கள் , மகாபாரதம் , இராமாயணம் ஆகியவற்றிலுள்ள கதைகளை

கலாநிதி இராசு காளிதாஸ்

ஆதாரமாக்க் கொண்ட சிற்பங்கள் மிகுதியாக் உருவாக்கப்பட்டன. வைணவக் கோயில்களில் தசாவதாரங்களின் தோற்றத்தை விளக்கும் சிற்பங்கள் கூடுதலாக அமைக் கப்பட்டன. சரபமூர்த்தி ,வீரபத்திரர் என்போரின் உருவங்களும் மைதுனக் கோலமான வடிவங்களும் முற்காலங்களில் காட்டிலும் கூடுதலான எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டன. சிறுத்தொண்டர் பற்றிய கதை தெலுங்கு தேசத்துக்கோயில்களிலும் கர்நாடகத்துக் கோயில்களிலும் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளமை இன்னொரு சிறப்பம்சமாகும்.

(தொடரும்)

**"விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்" ஆய்வுத் தொடரில் நாளை பேராசிரியர் சி.பத்மநாதனின் "நாயக்கர் கால சிற்பக்கலை" ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகும்.**

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 9 விதி எண் : 7

### உடலமைப்பு

பிறந்த எண் 9 விதி எண் 7 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் செவ்வாய், கேது ஆகியோர் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் கம்பீரத் தோற்றத்துடன் அழகுடன் அதே சமயம் பிறருக்கு அச்சம் ஊட்டக் கூடியவர்களாகவும் காட்சி தருவர்.

### மன, குணவியல்பு

இவர்களைக் கண்டு பிறர் அஞ்சுவர். இவர்கள் துணிச்சலும் தைரியமும் மிகுந்தவர்கள் போல் காணப்படுவர். ஆனால் இவர்கள் மிகவும் பயந்த சுபாவமுடையவர்கள்.

அது மட்டுமல்ல எதிலும் மனத்தெளிவு இல்லாதவர்கள். எல்லாவற்றிலும் குழப்பமடைவர். எதையும் சரியான முறையில் சிந்தித்து செயல்படமாட்டார்கள். அந்த அளவுக்கு நுட்பமான அறிவுத் திறனற்றவர்களாக இருப்பர்.

இவர்கள் தங்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பிறரிடம் வெளியிடமாட்டார்கள். தம்முள்ளேயே எண்ணிப் புழுங்கக் கூடியவர்களாக இருப்பர்.

அதனால் இவர்களின் பிரச்சினை எளிதில் தீருவதில்லை. அதனால் இவர்களின் முன்னேற்றத்திற்கே இது முட்டுக்கட்டையாகவும் ஆகக் கூடும்.

இவர்கள் பிறரிடம் ஏதேனும் தவறு கண்டால் அதை வெளிப்படையாகப் பலரறியக் கண்டிப்பர். அதனால் பிறரின் பகைக்கும் வெறுப்புக்கும் ஆளாக நேரும்.

அத்துடன் இவர்கள் எதையும் சீக்கிரமாகத் தம்மைப் போல சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதோடு வற்புறுத்தவர். அதனாலும் பிறர் வெறுப்பைச் சம்பாதிக்க நேரும். முன் கோபக்காரர்கள். கோபம் வந்துவிட்டால் தாறுமாறாகப் பேசிவிடுவர்.

அதே சமயம் பிறர்படும் துன்பம் கண்டு பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். வலியச் சென்று உதவி புரிவர். நாய், பூனை போன்ற விலங்குகளிடம் கூட அன்பும் பரிவும் காட்டுவர். காமவேட்கை மிகுந்தவர்களாகவும் இருப்பர்.

இயற்கைக் காட்சிகளை இரசிக்கக் கூடியவர்களாக இருப்பர். தம் வீடு, சுற்றுப்புறங்களைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக் கொள்வர். கடவுள் நம்பிக்கை கொண்டவர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை நன்றாக அமைந்தாலும் இவர்களின் முன்கோபத்தால் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். இவர்கள் ஆண்களாக இருப்பின் பெண்களாலும், பெண்களாக இருப்பின் ஆண்களாலும் கலகமும் சண்டை சச்சரவுகளும் நேரும். இருப்பினும் குடும்பத்தில் செழிப்பு உண்டாகும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலைத்துறையில் நாட்டமும் எழுத்தாற்றல் பேச்சாற்றலில் சிறந்தவர்களாகவும் இருக்கக் கூடும். மருத்துவத்திலும், பொறியியல் துறையிலும் வல்லவர்களாக இருப்பர்.

விவசாயம் மற்றும் இரும்புத் தொடர்பிலான வண்டி வாகனம் போன்ற தொழில்களை நடத்துபவராகவோ அத்துறையில் பணிபுரிபவராகவோ இருப்பர். பலவகைப் பொருட்களை வியாபாரம் செய்யவும் கூடும்.

இவர்கள் பொருளாதாரத் துறையில் படிப்படியாக உயர்ந்து முன்னேற்றம் பெறுவர். இருந்தாலும் அப்பணத்தினால் சந்தோஷம், திருப்தியான வாழ்க்கை பெறுவது கடினம்.

### ஆரோக்கியநிலை

இவர்களுக்கு அடிக்கடி ஆரோக்கியக் கேடு உண்டாகும். அளவுக்கு மீறிய சிந்தனையால் சித்தப் பிரமை ஏற்படக்கூடும். மூட்டு வலி, முதுகுவலி போன்ற நரம்பு மூட்டு சம்பந்தப்பட்ட நோய்களும் இரத்த அழுத்தம், இருதய நோய் போன்றனவும் ஏற்படக்கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன், சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 5,6 தொடர்பிலான எண்களில் யோகமான பலன் தருவனவற்றில் தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 5,6 தொடர்பிலான யோகமான எண்களுக்குப் பெயர் அமைத்தலே அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 5,6 அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

இவர்களுக்கு ஆகாத எண்கள், திகதிகள் என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லை.

## உடல் எண் : 9 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 9 விதி எண் 8 ஆகக் கொண்டு பிறந்தவர் செவ்வாய், சனி இருவரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் கம்பீரத் தோற்றமுள்ளவர். பிறரை, பிரமிக்க வைக்கக் கூடியவர்களாக இருப்பர். உடல் பலம் கொண்டவர்கள்.

### மன, குணவியல்பு

இவர்கள் மனபலம் கொண்டவர்களாகவும் எதற்கும் அஞ்சா நெஞ்சம் கொண்டவர்களாகவும் இருப்பர். இவர்கள் சாந்தமானவர்களாகக் காணப்பட்டாலும் முன்கோபக்காரர்கள்.

இவர்களிடமுள்ள எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் பிறரைக் கவரும்படியும் பாராட்டும் படியும் இருக்கும்.

இவர்கள் தம் மனத்திலுள்ளதை அஞ்சாது வெளியிடக்கூடியவர்கள். இதனால் எந்த விளைவுகள் நேருவதாக இருந்தாலும் கொஞ்சமும் கவலைப்படமாட்டார்கள். துணிந்து வெளியிட்டு ஏற்படும் எதிர்ப்புகளைச் சமாளிப்பர்.

இவர்களுக்கு பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுவது ருசிகரமான விடயம். அதனால் சில நேரங்களில் இவர்களே பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவும் கூடும்.

இவர்கள் புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டவர்களாக இருப்பர். ஊர்ப்பயணம் செய்வதில் அதிக ஆர்வமுள்ளவர்களாகவும் இருப்பர். உலக அனுபவம் அதிகம் பெற்றிருப்பர்.

இவர்கள் தாம் ஈடுபடும் செயலை நன்றாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள். அதில் சிறிதும் சலிக்கமாட்டார்கள். அதனால் பிறரின் பாராட்டுதலையும் பெறுவர்.

இவர்கள் தம் இனம், சமயம் போன்றவற்றில் அதிகப் பற்று கொண்டவர்களாயும் அதன் சிறப்புக்குப் பாடுபடக் கூடியவர்களாகவும் இருப்பர். அத்துடன் கடவுள் நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கையில் அடிக்கடி வேண்டாத பிரச்சினைகளும் அதனால் வேதனைகளும் உண்டாகும். அத்துடன் அடிக்கடி பற்றாக்குறை ஏற்படவும் கூடும். குடும்பத்தில் சமச்சீர் இன்றி ஏற்றத்தாழ்வுடன் காணப்படுவர்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் புதுமை விரும்பிகள். அதனால் புதிய முறையில், தாம் ஈடுபடும் தொழில்களைச் செய்வர். நிலம், கட்டம், மற்றும் இரும்பு. எந்திரத் தொழில்கள், வாகனத் தொழில். விவசாயம் மற்றும் கால்நடைப் பண்ணை போன்றவற்றில் இவர்களுக்கு ஆதாயம் பெற வாய்ப்புண்டு.

இவர்கள் ஆரம்பத்தில் பல சிரமங்களை மேற்கொண்டாலும் பிற்காலத்தில் முன்னேறவும், அதிகம் சம்பாதிக்கவும் கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு நுரையீரல் பாதிப்பால் காசம் போன்ற நோயும் இருதய பாதிப்பும் இரத்த அழுத்தம் ஏற்படக் கூடும். மதுமேகம் என்னும் நீரிழிவு நோயும், மூலம், பவுத்திரம், வயிற்று வலி, முதுகுவலி போன்ற நோய்களும் ஏற்படும்.

இவர்களுக்கு அடிக்கடி ஏதேனும் ஒரு நோய் ஏற்பட்டு தொல்லை கொடுக்கும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன், சுக்கிரன், செவ்வாய் இவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட 5, 6, 9 அது தொடர்பிலான யோகமான பலன்தரும் எண்களுக்குப் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக் கூட 5, 6. 9 தொடர்பிலான எண்களுக்குள்ள பெயரே பொருத்தமானது ; யோகமானது.

இவர்களுக்கு 5, 6, 9 தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சந்திரன், கேது, சனி ஆதிக்கம் பெற்ற 2, 7, 8 அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமில்லாதவை. (தொடரும்)

---

### கடுமையான குற்றச்சாட்டுகளற்ற

## புலிச் சந்தேக நபர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - ஜனாதிபதி

கடுமையான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் படாத தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்களை விடுதலை செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாண பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையிடம் உறுதியளித்துள்ளார். தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்ளும் நோக்கில் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது அவர் இந்த உறுதியை வழங்கியுள்ளதாக லங்காதீப சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போது இடம்பெயர் மக்களை மீள் குடியேற்ற வரும் நடவடிக்கைகளுக்கு பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதிக்கு நன்றிகளை தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். கன்னியர் மட பாடசாலையை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறிக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிகிறது. (2-6)

---

## 94 சதவீத வீடுகளுக்கு இவ்வாண்டு மின்சார வசதி

### அமைச்சர் செனவிரத்ன

(கொழும்பு)


நாட்டில் உள்ள வீடுகளில் 94 சதவீத வீடுகளுக்கான மின்சாரத் தேவை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

இதற்கமைவாக நாட்டின் மின்சார உற்பத்தியின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேலும் 550 மெகா வோர்ட் மின்சாரம் பாவனைக்காக பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நுரைச்சோலை நிலக்கரி மின்சார திட்டத்தில் இருந்து பெறப்படவுள்ள 300 மெகா வோர்ட் மின்சாரம் இதில் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(2-6)

---





உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வில் யாழ். கல்வி வலய றோமன் கத்தோலிக்க முதன்மை ஆசிரியர் அன்ரனி பீற்றர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் மு. விக்னேஸ்வரன், உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் தந்தை அருட்திரு யூட் நிக்ஷன் அடிகளார், உரும்பிராய் புனித இமானுவேல் ஆலய பங்குத் தந்தை டிக்சன் அடிகளார் ஆகியோர் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : கோப்பாய் நிருபர்)

# டெங்கிலிருந்து பாதுகாக்கும் புல் எண்ணெய் (Citronella oil)

இன்று நாம் டெங்கு நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள பின்வரும் இரு பிரதான வழிமுறைகளை பின்பற்றுகின்றோம்.

1.நுளம்புகள் எம்மை அணுகுவதை தடுத்தல் .

2. நுளம்புகள் பெருகுவதை தடுத் தல். நுளம்புகளால் டெங்கு காய்ச்சல் மலே ரியா, சிக்குன்குனியா,யானைக்கால் நோய் போன்றன ஏற்படுவது தெரிந்ததே. நுளம்புகள் எம்மை அணுகுவதை தடுப்பதற்கு பல்வேறு வழி முறைகள் மக்களால் பின்பற்றப் படுகின்றன.

1. நுளம்புவலை
2.நுளம்புத்திரி
3.விசிறிகள்
4.மின்சாரத்தில் இயங்கும் மணம் பரப்பிகள்
4.புல்லெண்ணை பாவித்தல்
5. புகையூட்டல்

மேற்கூறிய முறைகளில் பெரும்பாலும் பகலில் கடிக்கும் டெங்கு நுளம்பை தடுக்க புல்லெண்ணையை எமது உடலில் பூசிக் கொள்வதே சிறப்பானது. ஏனெனில் பொழுது புலர்ந்ததும் நாம் எமது பிள்ளைகள் பல்வேறு தேவைகளை நிறைவு செய்தல் பொருட்டு வீட்டிலும் , வெளியிலும் நடமாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இந்நேரத்தில் ஒருவர் புல்லெண்ணையை தனது உட லின் கை, கால், கழுத்து, கன்னங்களில் பூசு வதன் மூலம் அம் மணம்(Smell) இருக்கும் மட்டும் அவரை நுளம்புகள் அணுகமாட்டாது. தற்போது பாவனையிலுள்ள நுளம்புக்கு எதிரான சில பூசும் ( Oinment ) மருந்துகள் இவ் எண்ணையை அடிப்படையாக கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளன.



இவ் எண்ணை இயற்கை மூலிகை தாவரமான சிற்றெல்லா தாவரத்தின் இலை, தண்டு பகு திகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. இப் புல்லெண்ணையை பாதுகாப்பு படையினர், காட்டுக்குச் செல்வோர், சுற்றுலா பயணிகள் பாவிப்பதும் நீங்கள் அறிந்த விடயமே. பகலில் கடிக்கும் டெங்கு நுளம்பை தடுக்க எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் Anytime, Anyplace)பாவிக்கலாம். எம் முடன் எப் பொழுதும் இந்நிலையில் எடுத்துச் செல்லப் படும் அவசியமான எண்ணெயாக (Essential oil) கருதப்படுகின்றது.

பாடசாலை பிள்ளைகள் , தனியார் கல்வி நிறு வனங்களுக்கு செல்வோர், வேலை செய்வோர், பயணிகள் போன்றோர் பாவிப்பற்கு சிறந்தது. தம்முடன் எடுத்துச் செல்லல் இலகு, இவ் வெண்ணையை பாவிப்பதனால் புகை, தூசு வராது. மின்சாரம், நெருப்பு தேவையில்லை. நடை 'முறை பாவனைக்கு உகந்தது.

ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 1 அவுன்ஸ் போத்தல் எண் ணெயே போதுமானது. எனவே

**ஆறுமுகம் ஆனந்தமூர்த்தி**
**தாதிய உத்தியோகத்தர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

மக்கள் டெங்கு நுளம்பு கடிக்கும் நேரங்களிலாவது இவ் வெண்ணையை அல்லது இவ் வெண்ணையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படும் பூசும் மருந்துகளை பாவிப்பது சிறப்பாகும்.

இதன் மூலம் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம். தற்போது வியாபார உலகில் சுத்தமான புல் எண் ணையை (Pure Citronella oil) பெறுவது கடினமான விடயம். இருந்த போதிலும் யாழ். வணிகர் கழகங்கள் போன் றவை இவ்விடயத்தில் தலையிட்டு பொதுமக்களுக்கு குறைந்த விலையில் சுத்தமான எண்ணையை விநியோகிக்க வழி செய்தல் சாலச் சிறந்தது.

## வாக்குறுதிகளை நிறைவேற்றாத நாளைய இளைஞர்களுக்கான அமைப்பு

(கொழும்பு)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பைச் சேர்ந்த அகதி இளைஞர்,யுவதிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஹன்ச பலவேகய என்ற அமைப்பில் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர்களுக்கான நாளை என்ற இந்த அமைப்பு ஆளும் கட்சியினரால் உருவாக்கப்பட்டு முன் னெடுக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. இதேவேளை ஹன்ச பலவேகய எதிர்கக்ட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு திரட்டும் நோக் கில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது இளைஞர்களுக்கான நாளை அமைப்பினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத காரணத்தினால் தாம் ஹன்ச பலவேகயவில் இணைந்து கொண்டதாக இளைஞர்,யுவதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான பட்டதாரி மாணவர்கள் தொழில் வாய்ப்பின்றி அல்லறுவதாக ஹன்ச பலவேகயவின் தலைவர் இந்திக்க பண்டார தெரிவித்துள்ளார். (2-6)

## திருப்பாவை விரதப் பூர்த்தி

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தில் நாளை புதன் கிழமை திருப்பாவை விரதபூர்த்தியும் திரு மஞ்சன நீராட்டு விழாவும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 3 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பித்து அபிஷேக ஆராதனைகளை அடுத்து சுவாமி உள் வீதி வலம் வருதலும் தீர்த்த உற்சவம், ஊஞ்சல் பாட்டு என்பனவும் இடம்பெறவுள்ளது. (6-4-36)

## கறுப்புப் பணத்தை வெளியேற்றும் நோக்கில் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சட்டம் தளர்வு

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கறுப்புப் பணத்தை வெளியேற்றும் நோக்கில் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சட்டத்தை அரசாங்கம் தளர்த்தியுள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

சட்டவிரோதமாக ஈட்டிய பணத்தை சில நபர்கள் வெளியேற்றுவதற்கு உசிதமான சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய சட்டத்தின் அடிப்படையில் இலங்கையர்கள் வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்ய முடியும் என ஜே.வி.வி. சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டில் பெருந்தொகையான கறுப்புப் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தேர்தலில் தோல்வியடையக் கூடும் என்ற அச்சம் காரணமாக சிலர் தமது கறுப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்து வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

வெ்ளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய சட்டம் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு ஆசிய நாடுகளில் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இவ்வாறான ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டதனால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சிலரின் நன்மையை கருத்திற் கொண்டு அரசாங்கம் இவ்வாறான தீர்மானங்களை நிறைவேற்றக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## "டெங்கு" நோய் பரப்பும் நுளம்பை ஒழிப்போம்!

'டெங்கு' வைப் பரப்புவதோ நுளம்பென அறிந்தோம் ! எனவே
இங்கு நாம் இன்னும் வாழாது இருப்பது முறையோ? சொல்வீர்!
எங்களால் முடியும் இந்த மண்ணினில் நுளம்பை ஒழிக்க!
எங்களின் சுற்றுச் சூழலை சுத்தமாய் வைத்திருந்தால்!

எங்களின் இல்லம் தனிலே இதனை நாம் தொடங்கித் தொடர்ந்து
எங்களின் வீதி கிராமம் கல்விச் சாலைகள் கோவில் மற்றும்
எங்களின் பயன்பாட்டிலுள்ள இடங்களின் சுற்றுச் சூழல்
எங்களின் செயற்பாட்டினாலே சுத்தமாய் திகழவைப்போம்!

நோயது அணுகாது உலகைக் காத்திடத் தொண்டு செய்வோம்!
நோயது கண்டோர் தம்மைக் காத்திடச் சிகிச்சை செய்வோம்!
நோயது வருமுன் எம்மைக் காத்திடல் மேலாம் ! அதனால்
நோயது தரும் நுளம்புப் பெருக்கத்தைத் தடுத்தல் செய்வோம்!

நயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்

## தடைசெய்யப்பட்டிருந்த உற்பத்தி நிறுவனங்கள் மூலம் மீண்டும் இலங்கைக்கான மருந்து பொருட்கள்

(கொழும்பு)

தரம் குறைந்த மருந்துப் பொருட்களை விநியோகம் செய்த காரணத்திற்காக தடை செய்யப்பட்டிருந்த இந்தியாவின் ஆறு மருந்துப்பொருள் உற்பத்தி நிறுவனங்களும் மீண்டும் இலங்கைக்கான ஏற்றுமதிகளை ஆரம்பித்துள்ளதாக டெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உரிய தரத்திற்கு அமைய உற்பத்தி செய்யப்படாத மருந்துப் பொருட்களை விநியோகம் செய்தமைக்காக இந்தியாவின் ஆறுமுக்கிய மருந்துப் பொருள் உற்பத்தியாளர்களை கடந்த நவம்பர் மாதம் இலங்கை கறுப்புப் பட்டியல் படுத்தியது தெரிந்ததே.

எனினும் குறித்த ஆறு மருந்துப் பொருள் உற்பத்தியாளர்களும் ஒரு மாத கால இடை வெளிக்குள் மீண்டும் இலங்கைக்கு மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பு காலம் கடந்த மருந்துப் பொருட்கள் தடுப்பூசிகளில் இறப்பர் மற்றும் கண்ணாடித் துகள்கள் காணப்பட்டமை என பல்வேறு குற்றச் சாட்டுக்கள் குறித்த நிறுவனங்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் தமது மருந்துப் பொருள் உற்பத்திகளின் தரம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினை தற்போது திருப்திப்படுத்தியுள்ளதாக தடை செய்யப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான பெல்கோ பார்மா நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தியா மருந்துப் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் வருடாந்தம் இலங்கைக்கு 3.5 பில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

O/L & A/L School Leavers

புத்தாண்டில் உங்கள் முதல் ஆரம்பம் Computer கல்வியில் தொடங்கட்டும்

CSC COMPUTER EDUCATION
An ISO 9001 : 2000 Certified Institution

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Diploma in PC Professional | 4 Months* |
| Diploma in Office Automation | 4 Months |
| Advanced Diploma in JAVA Programming | 4 Months* |
| Advanced Diploma in Hardware & Networking | 2-3 Months* |
| Adv. Diploma in Macromedia Application | 4 Months |
| Professional Diploma in Graphic Design | 4 Months |

60% Discount Offer

* Diploma Awarded by CSC Computer-Education, India.

Application - Graphics - Multimedia
Softview Visual Communication

| | |
|---|---|
| Adv. Diploma in Digital Pre-Press | 3 Months* |
| Diploma in Video Production | 3 Months* |

50% Discount Offer



Direct Start Pay 4900/- only

Diploma in MS Office Application | Diploma in Web Design & Development | Diploma in Computerised Accounting

அனைத்து பாடநெறிகளுக்கும் காலம்: 3 மாதம்

யாழ்மாவட்டத்தில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P: 021-3734088

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு கெயார் நிறுவனம் உதவி


(பொன்னாலை)

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு கெயார் நிறுவனம் உணவல்லாத பொருட்களை வழங்கியுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 6 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 400 குடும்பங்களுக்கே இப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பொருட்கள் உள்ளடங்கலாக குடும்பம் ஒன்றுக்கு சுமார் 3500 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அராலி தெற்கு, அராலி வடக்கு,அராலி கிழக்கு, அராலி மேற்கு, அராலி மத்தி, வட்டு தென்.கிழக்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச்சோந்த குடும்பங்களுக்கே இவ்வாறு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (6-49)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் தரம் ஒன்று. தரம் இரண்டு மாணவர்களின் கலை நிகழ்வைப் படத்தில் காணலாம்.

# இலங்கை அகதிகள் இடமாற்ற உத்தரவுக்கு தடை விதிப்பு

## சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

இலங்கை அகதிகளை இடமாற்றம் செய்யக் கோரிய அரசின் உத்தரவுக்கு சென்னை மேல் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளயம் தாலுகா வேடர் காலனியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது.

இங்கு வசிக்கும் ஜெயசித்திரா, நந்தகுமார் மடுஜித் ஆகியோர் சென்னை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட நாங்கள் 1990 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு வந்து இந்த முகாமில் 20 ஆண்டுகளாக குடும்பத்தினருடன் வசித்து வருகிறோம்.

இந்த நிலையில் எங்களை திடீரென்று வேறு இடத்திற்கு மாற்றும்படி மறுவாழ்வுத் துறை இயக்குநர் உத்தரவிட்டார்.

கோவை மாவட்ட ஆட்சியாளர், கியூ பிரிவு பொலிஸார் அளித்த பரிந்துரையின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அந்த உத்தரவில் மறு வாழ்வுத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ஆனால் நாங்கள் மாற்றப்பட வேண்டிய காரணத்தை அவர் அதில் சொல்லவில்லை. இந்த உத்தரவின் அடிப்படையில் எங்களது பெயர்பதிவு நீக்கப்பட்டு விட்டது. இதனால் உதவித்தொகை , உணவு அட்டை உள்ளிட்ட சலுகைகளைப் பெறமுடியாமல் போய்விட்டது.

இருபது ஆண்டுகளாக தங்கியிருந்து எங்கள் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களுக்கும் பெருத்த இடையூறு ஏற்படுகிறது. எங்களை இடமாற்றம் செய்யும் இயக்குநரின் உத்தரவு மனித உரிமைகளுக்கும் அரசியல் சாசன விதிகளுக்கும் முரணானது. எனவே அதை ரத்துச் செய்து உத்தரவிட வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள் ளது.

இந்த மனுவை மேல் நீதிமன்ற நீதிபதி கே.வெங்கட்ராமன் விசாரித்தார். மறுவாழ்வுத்துறை இயக்குநர் பிறப்பித்த உத்தரவிற்கு இடைக்கால தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் மனுவுக்கான பதில் மனுவை இன்று தாக்கல் செய்யும்படி மறுவாழ்வுத்துறை இயக்குநர் கோவை மாவட்ட ஆட்சியாளர், கியூ பிரிவு பொலிஸ் சூப்பிரண்டு ஆகியோருக்கு நோட்டிஸ் அனுப்பவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். (2-6)

# வாக்காளர் இடாப்பு பொதுமக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் அலுவலகத்தால் அனுப்பப்பட்டுள்ள நல்லூர் பிரதேச சபை பிரிவிற்குரிய திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டிற்கான A,B நிரல்களை கொண்ட வாக்காளர் இடாப்புக்களினை பொதுமக்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் எதிர் வரும் 28 ஆம் திகதி வரை அலுவலக் நேரங்களில் பார்வையிட முடியும் என நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (6-30)

## இந்திய கிராமங்கள் மீது

# பாகிஸ்தான் இராணுவம் ரொக்கெட் குண்டு வீச்சு

இந்தியா –பாகிஸ்தான் இராணுவத்துக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. எனினும், இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவத்தினர் அடிக்கடி அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், தீவிரவாதிகளை ஊடுருவச் செய்வதற்காக இந்திய இராணுவத்தின் கவனத்தை திசை திருப்பவும் அதுபோன்ற தாக்குதலை நடத்துவது பாகிஸ்தான் இராணுவத்தின் வாடிக்கையாக உள்ளது.

இந்த சூழ்நிலையில், பஞ்சாப் மாநிலம் அட்டாரி அருகே உள்ள எல்லைப் பாதுகாப்பு முகாமில் பாகிஸ்தான் இராணுவம்கடந்த சனிக்கிழமை அத்துமீறி ரொக்கெட் குண்டுகளை வீசியது.

இந்தியா - பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் இருந்து 2 கி.மீ. தொலைவில் (இந்தியாவுக்குள்) கங்கார் என்ற எல்லைப் பாதுகாப்பு மையம் உள்ளது. அதன் அருகில் ஏராளமான கிராமங்களும் அமைந்துள்ளன.

பாகிஸ்தானில் உள்ள கே.எஸ். வாலா எல்லைப் பாதுகாப்பு மையத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை அதிகாலை 12.30 மணி அளவில் சரமாரியாக ரொக்கெட் குண்டுகள் பாய்ந்து வந்தன. கங்கார் மையம் நோக்கி வந்த அந்த குண்டுகள் குறி தவறி, அங்கு உள்ள கிராமங்கள் அருகே விழுந்தன. அதிர்ஷ்டவசமாக அவை வெடிக்கவில்லை.

மொத்தம் 4 ரொக்கெட் குண்டுகள் விழுந்தன. பாதுகாப்பு மையத்துக்குள் விழுந்த இரண்டு ரொக்கெட் குண்டுகள் மட்டும் வெடித்தன. வயல் வெளிகளில் விழுந்த இரண்டு ரொக்கெட் குண்டுகள் வெடிக்கவில்லை.

மேலும், கடுமையான பனிமூட்டம் இருந்ததால் ரொக்கெட் குண்டுகள் புறப்பட்டு வந்த திசையை அறியமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உடனே,பாகிஸ்தான் மையத்தை நோக்கி இந்திய எல்லை பாதுகாப்புப் படையினர் சரமாரியாக தாக்குதல் நடத்தி பதிலடி கொடுத்தனர். இயந்திரத் துப்பாக்கி மற்றும் சிறிய ரக பீரங்கிகளால் சுட்டனர்.

இந்தியாவின் பதிலடி தாக்குதலில் பாகிஸ்தானைசேர்ந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலுக்கு இந்தியா சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## சபரி மலையில்

# தோஷங்களை போக்கும் இசைக்கருவியாக பறை

(சபரிமலை)



சபரிமலையில் ஐயப்ப பக்தர்களின் தோஷங்களை நீக்க பழங்காலத்திய பறை இசைக் கருவி வாசிக்கப்படுகிறது. சபரி மலைக்கு வரும் ஐயப்பப் பக்தர்கள் தங்களது பிறவிப் பலன் தோஷங்களை நிவர்த்தி செய்யவும் மனித உடலில் இருக்கும் தீயசக்தி களின் ஆவி வெளியேறவும் பலவித பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றனர்.

பறை உள்ளிட்ட இசைக் கருவியை மந்திரங்களுடன் வாசிப்பதால் இறைவன் அருள் கிடைக்கும், தோஷங்கள் நீங்கும், தீய சக்திகள் விலகும் என்ற நம்பிக்கையில் இந்தக் கருவிகள் சபரிமலையில் வாசிக்கப்படுகின்றன.

இதுகுறித்து பறை வாசிக்கும் பிரசாத் என்பவர் கூறியதாவது,

பறை இசைக் கருவி பழங்காலத்தில் இருந்து வாசிக்கப்பட்டு வரும் மேள இசைக் கருவியாகும். இது எங்களது குடும்பத்தின் குலத் தொழிலாகும்.

இந்தப் பறை மேள வாசிப்பை கற்றுக் கொள்ளும் முன் சிவனையும், ஐயப்பனையும் வழிபட்டு முறையாக மந்திரத்தை கற்றுக் கொள்வோம். இந்த மேள வாசிப்பில் ஓம், சிவ சிவ சக்தி எழுந்துவா என்ற மேள ஓசை எழுப்பப்படுகிறது.

அரச குடும்பத்தில் மணிகண்டன் (ஐயப்பன்) வாழ்ந்து வரும் போது மந்திரிகளின் சூழ்ச்சியால் ஐயப்பனுக்கு ஆபத்து ஏற்படுகிறது. இந்தத் தீய சக்திகளின் பிடியில் இருந்து மணிகண்டனைக் காப்பாற்ற அந்த சமயத்தில் வேலன் என்பவன் இந்த இசைக் கருவியை வாசித்து ஐயப்பனுக்கு உதவி செய்தார்.

எனவே இதை நினைவுகூரும் வகையில் சபரிமலைக்கு வரும் ஐயப்ப பக்தர்களைக் காக்க இந்த மேளத்தை வாசிக்கிறோம் என்றார். இதேபோல நாக தோஷங்கள் நீங்க நாத வீணை வாசிக்கப்படுகிறது. (2-6)

# கள்ளநோட்டு குற்றச்சாட்டில் இலங்கைத் தொழிலதிபர் கைது

(சென்னை)

சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்த கொத்தமங்கலம் தமிழ் (வயது 40) என்பவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இவரிடம் இலங்கையைச்சேர்ந்த தொழில் அதிபர் விஜயசுரேந்திரன் என்பவர் சுவிட்சர் லாந்தில் வசிக்கும் தனது அக்காவுக்கு சென்னை அருகே ஒரு ஏக்கரில் நிலம் வேண்டும் என்று கேட்டுள்ளார்.அதற்கு ஏற்பாடு செய்வதாக கொத்தமங்கலம் தமிழ் தெரிவித் தார். இதற்கு முன்பணம் வேண்டும் என்றும் அவர் கேட்டார்.

முற்பணம் தருவதாக சொல்லி சென்னை பாரிமுனைக்கு கொத்தமங்கலம் தமிழை , சுரேந்திரன் வரச் சொன்னார். அதுபோல் பாரிமுனை சென்று முற்பணமாக ரூபா 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை கொத்தமங்கலம் தமிழ், சுரேந்திரனிடம் வாங்கி வந்தார்.

அந்தப் பணத்தை விருகம்பாக்கத்தில் உள்ள வங்கி ஒன்றில் வைப்புச் செய்தார். வங்கியில் பணத்தை எண்ணி சரிபார்த்த போது அதில் ரூபா 1 இலட்சம் கள்ள நோட்டுக்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இரு நூறு ,500 ரூபாய் நோட்டுகள் கள்ள நோட்டுக்களாக இருந்தன.

இந்த கள்ள நோட்டுகளை வங்கி நிர்வாகத்தினர் விருகம்பாக்கம் பொலிஸில் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி புகார் கொடுத்தனர். ரியல் எஸ்டேட் அதிபர் கொத்தமங்கலம் தமிழ் கைது செய்யப்பட்டார். அவர் இலங்கை தொழில் அதிபர் சுரேந்திரன் தான் இந்தப் பணத்தை கொடுத்தார் என்று தெரிவித்தார்.


சுரேந்திரனின் கைத் தொலைபேசியில் பொலிஸார் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் பணப்பரிமாற்றம் மூலம் சுவிற்சர் லாந்து நாட்டில் உள்ள தனது அக்கா தான் இந்தப் பணத்தை அனுப்பி வைத்ததாக கூறி பின்னர் தப்பி ஓடியபோது கைதுசெய்யப்பட்டார். (2-6)



சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரனையுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா அண்மையில் மயிலணி சைவமகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் மயிலணி சைவ வித்தியாலய மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.சரவண பவன் உரையாற்றுவதையும் பாராட்டுப்பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் -காரைநகர் செய்தியாளர்)

# ஜனாதிபதியை சந்தித்த போது தாயக கோட்பாட்டை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்

## பிரதமர் ரட்ணசிறி



(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் தமிழ் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பின் போது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை தமிழர்களின் தாயகமாக அங்கீகரிக்குமாறும் அவர்கள் சுயராஜ்ஜியம் நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரியதாக பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க தெரிவித்துள்ளார்.

கிரிந்திவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பின் போது ஐந்து கோரிக்கைகள் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் முன்வைக்கப்பட்டதாகவும், எனினும் அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை தமிழர்களின் தாயகமாக அங்கீகரிக்குமாறும் அவர்கள் சுயராஜ்ஜியம் நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என அவர்கள் ஜனாதிபதியிடம் கோரியதாகவும் அத்துடன் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை விடுவிக்குமாறும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கோரியதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்கிடையில் வடக்கில் இருந்து இராணுவத்தினர் ஒரே தடவையிலோ அன்றி படிப்படியாகவோ முற்றாக அகற்றப்பட வேண்டும் எனவும், இறுதியாக தமிழர் சுய ஆட்சிக்கான அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் இந்த ஐந்து கோரிக்கைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பது சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்பவே என பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# புலி ஆதரவாளர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கிய சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பிற்கு சீமெந்து மற்றும் ஏனைய பொருட்களை குறித்த சந்தேக நபர் விநியோகம் செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடார் மூர்த்தி சுந்தரேசன் என்ற நபரை கொள்ளுப்பிட்டி காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சீமெந் து வழங்கியதாகவும் புலிகளின் சார்பில் பணத்தை தனியார் வங்கியில் வைப்புச் செய்ததாகவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# இந்தோனேசியாவில்
# இல.கடற்படையின் அச்சுறுத்தலால் தமிழ் அகதிகள் சிலர் தரையிறங்கினர்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த மூன்று கடற் படையினருக்கு இந்தோனேசிய மெராக் துறைமுகத்தில் படகில் உள்ள இலங்கை அகதிகளுடன் பேச்சு நடத்த அனுமதிக்கப்பட்டது. அங்கு கடற்படையினர் சிலர் அச்சுறுத்தியதன் விளைவாக இந்தோனேசியாவில் படகில் இருந்து இலங்கை அகதிகளில் சிலர் தரையிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தரையிறங்க போவதில்லை என போராடி வருகின்ற இலங்கை அகதிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் இந்தோனேசியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகவே இது கருதப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த 3 இலங்கை கடற்படையினரும் அவர்களை தனித்தனியாக அழைத்து விசாரணை நடத்தியதுடன் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தெரி விக்கப்படுகிறது அதன் பின்னர் அவர்களில் இருந்து 8 பேர் தரையிறங்க சம்மதித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் எஞ்சிய 244 இலங்கை அகதிகளும் குறித்த படகிலேயே தங்கி இருப்பதாகவும் அவர்களுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவையின் அகதி அந்தஸ்து கோருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவுஸ்திரேலிய அகதிகள் காப்பகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் அவர்களையும் அச்சுறுத்தி படகில் இருந்து வெளியேற்றும் முயற்சிகள் மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (2-6)

# தமிழ் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும்
# சிறைச்சாலைகள் ஆணையாளர்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ. ஆர்.சில்வா தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் கைதிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களது நிலைப்பாடு குறித்து நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகள் வெற்றி யளித்ததனைத் தொடர்ந்து திருகோணமலை தமிழ் அரசியல் கைதிகள் தங்களது போராட்டத்தை கைவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீதித்துறையில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு தாம் விளக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# தகவல்கள் அறியும் உரிமையை சட்டமாக்க ஊடகங்கள் கோரிக்கை

(கொழும்பு)

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை சட்டமாக்கப்படவேண்டுமென ஊடக அமைப்புகள் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கமைய மக்கள் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை முழுமையாக பாதுகாக்கப்படவேண்டுமென ஊடக அமைப்புகள் சில கூட்டாக இணைந்து கோரியுள்ளன.

இவ்வாறு தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை சட்டமாக்கப்படுவதன் மூலம் நாட்டில் ஊடக சுதந்திரத்தைப் பேண முடியும் என அவை சுட்டிக்காட்டியுள்ளன.

சுதந்திர ஊடக அமைப்பு, பத்திரிகை ஆசிரியர் பேரவை ,இலங்கை பத்திரிகை உரிமையாளர் சங்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் ஊடகப் பேரவை, தமிழ் ஊடகப் பேரவை உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய இரண்டு பிரதான கட்சிகளிடமும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன. (2-6)



சங்கத்தானை ஸ்ரீ முருகன் முன்பள்ளி கலைவிழா நிகழ்வில் டாக்டர் அம்பிகைபாகன் மாணவனொருவனுக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதனையும் அருகில் ஓய்வுபெற்ற நூலகர் பாலசுப்பிரமணியம் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# ஊழல் மோசடிகள் சீனாவில் வெகுவாக உயர்வு

சீனாவில் ஊழல் மோசடிகளின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளதென அந்நாட்டு ஊழல் கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டில் 1இலட்சத்து 6 ஆயிரம் அதிகாரிகள் ஊழல்மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது சீனாவின் ஊழல் மோசடிகளின் எண்ணிக்கை 2.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி உற்பத்தி மற்றும் சனத்தொகை அதிகரிப்பு ஆகியவற்றை விடவும் சீனாவில் ஊழல் மோசடிப் பிரச்சினை அதிகமாக காணப்படுவதாக சுட்டிகாட்டப்படுகிறது.

அதில் குறிப்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் மிகமோசமான முறையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சுயாதீன கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை அங்கு காணப்படுவதனால் ஆளும்கட்சியின் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் அரசாங்க நிறுவனங்களுக்கு பதவி நியமனங்களின் போது ஏற்படும் குறைபாடுகளே ஊழல் மோசடிகளுக்கான பிரதான காரணி எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-6)

# லண்டனில் சீக்கியர் குத்திக் கொலை

(லண்டன்)

லண்டனில் சுக்விந்தர் என்ற சீக்கியர் திருடர்களால் குத்திக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு நடந்தது.லண்டன் பார்க்கிங் ஸ்டேஷனை விட்டு ஒரு பெண் வெளியே வந்தார். அப்போது இரண்டு பேர் அந்தப் பெண் தோளில் மாட்டியிருந்த பையைப் பறித்துக்கொண்டு ஓடினார்கள். அவர் திருடன் திருடன் எனக் கத்தினார்.

சுக்விந்தர் திருடர்களை துரத்தினார். அவர்களைப் பிடித்ததும் அவர்கள் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சுக்விந்தரைக் குத்தினார்கள். கத்தியால் குத்தப்பட்ட அவர் சரிந்து கீழே விழுந்தார். அங்கே இருந்தவர்கள் ராயல் இந்தியன் மருத்துவமனையில் சேர்த்தனர்.

மருத்துவமனையில் அவர் உயிரிழந்தார். கட்டட ஒப்பந்தக்காரரான சுக்விந்தர் கடந்த10 ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்தார். அவருக்கு வயது முப்பத்தியொன்று. ஒரு குழந்தை உள்ளது. பையைப் பறி கொடுத்த பெண் யாரென்று சுக்விந்தருக்கு தெரியாது. (2-6)

# பழைய காகிதங்களால் கட்டப்பட்ட பள்ளிக்கூடம்

தைவானைச் சேர்ந்த தம்பதியினர் பழைய காகிதத்தை கொண்டு பள்ளிக்கூடத்தை கட்டியுள்ளனர்.கனடாவை பிறப்பிடமாகக் கொண்டு தைவானில் வாழ்ந்து வருபவர் ஜான் லாமோரி (59) கட்டட ஆய்வாளராக வேலைபார்த்து ஓய்வுபெற்றவர். இவரது மனைவி செல்லி யூ தைவானைச் சேர்ந்தவர்.

சுற்றுச்சூழலில் ஆர்வம் கொண்ட இவர்கள், நண்பர்கள் கொடுத்த ஆலோசனையின்பேரில், தாங்கள் வசிக்கும் பிங்டங் பகுதியில் காகிதத்தால் ஆன பள்ளிக்கூடத்தை உருவாக்கியுள்ளனர்.

மாணவர்கள் பயன்படுத்தி குப்பையில் போடப்பட்ட காகிதங்களை இந்தத் தம்பதியினர், ஒன்றாக சேகரித்தனர். ஆயிரம் கிலோ வரை சேகரிக்கப்பட்ட இந்த காகிதத்தை கலவை இயந்திரத்தில் போட்டு, போதிய அளவு தண்ணீர் ஊற்றி , சிமெண்ட் கலந்து தயாரிக்கப்பட்ட கலவையைக் கொண்டு ஆறு அங்குலம் அகலமுள்ள சுவர் எழுப்பி பள்ளிக்கூடத்தைக் கட்டியுள்ளனர்.

75 சதுர மீற்றர் கொண்ட இந்த பள்ளிக்கூடத்தில் 16 மாணவர்கள் படிக்கலாம். சுவர்கள் மழையால் பாதிக்காத வகையில் சிலிகான் வர்ணம் பூசியுள்ளனர். இதைகட்டி முடிக்க ஒரு ஆண்டு ஆனது.

லாமோரியும், செல்லியும் தற்போது , பீட்சா வியாபாரம் செய்வதற்காக இதுபோன்ற கலவையில் செய்யப்பட்ட ஹோட்டலை கட்டி வருகின்றனர். (2-6)




# மைக்கேல் ஜாக்சன் கொல்லப்பட்டார் மருத்துவ சான்றிதழில் தகவல்



(லண்டன்)

பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் கொல்லப்பட்டதாக மருத்துவ சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகை செய்து வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான ரசிகர்களைக் கொண்டிருந்த அமெரிக்க பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன், கடந்த ஆண்டு ஜுலை மாதம் அதிகப்படியான போதை மருந்தை உட்கொண்டதால் இறந்ததாகக் கூறப்பட்டது. இதற்கமைய அதிகமான போதை மருந்தைக்கொடுத்ததற்காக அவரது டாக்டர் கொன்ராட் முரே மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே லண்டனிலிருந்து வெளிவரும், " நியூஸ் ஒப் தி வேர்ல்டு" என்ற பத்திரிகை, மைக்கேல் ஜாக்சனின் இறப்பு சான்றிதழில், " அவர் கொலை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளது.

மைக்லேல் ஜாக்சனுக்கு கடைசியாக சிகிச்சையளித்த டாக்டர் செர்ரி மேக் வில்லி, அவரது இறப்புக்கான காரணம் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை. ஆனால் ,ஆகஸ்ட் மாதம் மைக்கேல் ஜாக்சனின் உடலைப் பரிசோதனை செய்த மருத்துவ ஆய்வாளர் கிறிஸ்டோபர் ரோஜர், " இந்த சாவு அப்பட்டமான கொலை" என இறப்பு சான்றிதழில் திருத்தி எழுதியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த சான்றிதழின் நகலையும் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

மைக்கேல் ஜாக்சன் உடல் நிலை மோசமான நிலையில் இருந்தபோது கடுமையான போதை மருந்தை கொன்ராட் முரே அவருக்கு செலுத்தியுள்ளார். இதனால் தான் மைக்கேல் ஜாக்சன் இறந்துள்ளார்.

எனவே, இது கொலை தான் என மருத்துவ ஆய்வாளர் கிறிஸ்டோபர் ரோஜர் குறிப்பிட்டுள்ளதாக இந்த் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (2-6)

# விமானத்தை தகர்க்கப் போவதாக மிரட்டல் லண்டன் விமான நிலையத்தில் மூவர் கைது

(லண்டன்)

லண்டனில் இருந்து டுபாய் புறப்பட்ட விமானத்தை தகர்க்கப்போவதாக, அந்த விமானத்தில் பயுணித்த மூவர் மிரட்டல் விடுத்ததை அடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால், லண்டன் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி அமெரிக்க விமானத்தை நைஜீரியாவைச் சோந்த வாலிபர் தகர்க்க முயன்றதையடுத்து, அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகளின் விமான நிலையங்களில் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்திலிருந்து கடந்த சனிக்கிழமை டுபாய்க்கு எமிரேட்ஸ் விமானம் ஒன்று புறப்பட்டது. விமானத்தில் 331 பேர் இருந்தனர்.விமானம ஓடுபாதையில் சென்று கொண்டிருந்தபோது, விமானத்தில் இருந்தவர்களில் மூவர் விமானத்தை தகர்க்கப் போவதாக மிரட்டல் விடுத்தனர்.

இதையடுத்து,விமானப் பணியாளர்கள், பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். விமானம் மேலே எழுவதும நிறுத்தப்பட்டது. உடன் பொலிஸ் வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

விமானத்திற்குள் அதிரடியாக நுழைந்த பொலிஸ் அதிகாரிகள்,வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மூவரையும் கைவிலங்கிட்டு,வெளியே இழுத்துச்சென்றனர்.

பின்னர்,விமானம் முழுவதும் சோதனையிடப்பட்டது. வெடிகுண்டுகள் எதுவும் உள்ளனவா என,மோப்பநாய்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டது. சோதனையில் எதுவும் கிடைக்கவில்லை. அதன்பிறகு புறப்பட அனுமதிக்கப்பட்டது.இந்த சம்பவத்தால், விமானம் புறப்படுவது மூன்று மணிநேரம் தாமதமானது.

இதேபோல, அட்லாண்டாவிலிருந்து சான் பிரான்சிஸ்கோவுக்குச் சென்று கொண்டிருந்த விமானத்தில், போதையில் பயணி ஒருவர் கழிவறைக்குச் சென்று உள்ளே பூட்டிக் கொண்டார். இதனால், விமானத்தில் பரபரப்பு ஏற்பட்டது. விமானம் கொலராடோ விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. பின் அந்நாட்டு பொலிஸார் விமானத்துக்குள் புகுந்து, போதை நபர் முகமது அபுதாகிர் என்பவரைக் கைது செய்தனர். (2-6)




ஏர் கனடா அறிமுகப்படுத்திய 190 பயணிகளை ஏந்திச் செல்லும் புதிய ரக ஜெட் விமானம்...

# உலகின் உயரமான கட்டடத்திலிருந்து குதித்து வீரர்கள் சாதனை

(டுபாய்)

சமீபத்தில் திறப்பு விழா கண்ட உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் டுபாய் உச்சியில் இருந்து குதித்து ஸ்கை டைவிங் சாகச வீரர்கள் இருவர் சாதனை படைத்தனர்.

கடந்த வாரத்தில் திறப்பு விழா கண்ட புர்ஜ் துபாய் கட்டட உச்சியில் இருந்து டைவ் அடித்து சாதனை படைக்க ஸ்கை டைவிங் வீரர்களான ஓமர் அல் ஹெஜிலன், நாசர் அல் நயாதி ஆகியோர் முடிவுசெய்தனர். அதற்காக புர்ஜ் டுபாய் நிர்வாகம், டுபாய் அரசிடம் விண்ணப்பித்து அனுமதி பெற்றனர்.

அதன்படி புர்ஜ் டுபாய் கட்டடத்தில் இருந்து மணிக்கு 220 கி.மீ. வேகத்தில் கீழே குதித்தனர். ஒன்றரை நிமிடத்தில் தரையைத் தொட்டு இருவரும் சாதனை படைத்துள்ளனர்.

உயிருக்கு ஆபத்தானது ஸ்கை டைவிங் சாகசம். உயரமான மலை, கட்டடத்தில் இருந்து குதிக்கும் வீரர்கள் தரையைத் தொடுவதற்கு சில விநாடிகள் முன் பரசூட்டை விரித்து தரையில் மோதாமல் தப்புவர். அவ்வாறே இந்த சாதனையையும் குறித்த வீரர்கள் நிறைவேற்றியுள்ளனர். (2-6)

# அவுஸ்திரேலியாவில் தொடரும் இந்தியர் கொலை இனவெறி காரணமில்லை என்கிறது அரசு

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் எரிந்த நிலையில் பிணமாகக் கிடந்த இந்தியர் கழுத்தை அறுத்து கொலை செய்த பின் எரிக்கப்பட்டதாக பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இங்கு இந்தியர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர் கதையாகி வருகிறது.

அங்கு சமீபத்தில் நிதின்கார்க் என்ற இந்திய வாலிபர் குத்திக்கொல்லப்பட்டார். அந்த பரபரப்பு அடங்குவதற்குள் கடந்த 29ஆம் திகதி அன்று ரஞ்சோத் சிங் (வயது 25) என்ற இந்திய வாலிபர் கொலைசெய்யப்பட்டார்.

பாதி எரிக்கப்பட்ட நிலையில் அவருடைய உடல் கைப்பற்றப்பட்டது. இந்தக் கொலை வழக்கு விசாரணையில் கிடைத்துள்ள புதிய தகவல்கள் வருமாறு,

ரஞ்சோத்சிங் , இந்தியாவில் இருந்து விவசாய வேலைக்கு ஆட்களை அழைத்து வரும் ஒப்பந்தகாரராக செயற்பட்டு வந்தார். வாகா பகுதியில் வசித்து வந்த அவர் நியூசவுத்வோல் மாகாணத்தில் உள்ள கிரிபத் நகருக்குச் சென்ற போது கொலை செய்யப்பட்டார்.

தீ வைத்து எரிப்பதற்கு முன்பு அவருடைய கழுத்து அறுபட்டு இருந்ததாக விசாரணையில் தெரியவந்தது. இந்த கொலை தொடர்பாக கடந்த திங்கட்கிழமை அன்று சிட்னி விமான நிலையத்தில் 2 இந்தியர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தினார்கள்.

கொலை செய்யப்பட்ட ரஞ்சோத்சிங் தான் அவர்கள் இருவரையும் வேலையில் சேர்ந்து இருக்கிறார்.

சிங்கப்பூர் வழியாக நேபாளத்திற்குச் சென்று விமானத்தில் ஏறுவதற்கு முன் அவர்கள் இருவரையும் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். அவர்களிடம் இருந்து விசாக்களை பறிமுதல் செய்த பின் இருவரையும் பொலிஸார் விடுவித்தனர்.

ரஞ்சோத் சிங் கொலை செய்யப்படுவதற்கு முன்பு நடைபெற்ற கிறிஸ்மஸ் விருந்தின் போது சம்பளப் பணம் மீதி வைத்து இருந்தது தொடர்பாக தகராறு ஏற்பட்டதாகவும் அதன் காரணமாக இந்த கொலை நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இரு இந்திய வாலிபர்களும் இன வெறி காரணமாக கொல்லப்படவில்லை என்று அவுஸ்திரேலிய அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. அதேநேரத்தில் இந்திய பத்திரிகைகள் இது போன்ற செய்திகளை கட்டுப்பாட்டுடன் வெளியிட வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் விஸ்ணு பிரகாஷ் அறிவுறுத்தியிருந்ததை அவுஸ்திரேலிய வெளியுறவுத் துறைமந்திரி சிமன்கிரீன் வரவேற்றிருக்கிறார். (2-6)

# இரத்த அழுத்தமா... என்ன சாப்பிடலாம்?



இன்று மனிதர்களை பல வகையான நோய்கள் தாக்குகின்றன. இவற்றில் இரத்த அழுத்தமும், நீரிழிவு நோயும் முதன்மை வகிக்கிறது. இவ்விரு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் 40 வயதைத் தாண்டியவர்கள்.

*நித்திய கண்டம் பூரண ஆயுசு* என்ற பழமொழி போல் தினமும் இவர்களை கொஞ்சம் கொஞ்சமாக வாட்டும் நோய்தான் இந்த நீரிழிவு நோயும், இரத்த அழுத்த நோயும்.

ஒருவருக்கு நீரிழிவு நோயின் தாக்கம் இருந்தால் இரத்த அழுத்த நோயும் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த இரத்த அழுத்த நோயை மௌன கொலையாளி என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மனித உடலின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 72 முறை சுருங்கி விரிகிறது. இந்த சுருங்கி விரியும் தன்மை 120/80 வரை சராசரி மனிதர்களுக்கு இருக்கும். இந்த சுருங்கி விரியும் தன்மை அதிகரித்தால் உயர் இரத்த அழுத்த நோயும், குறைந்தால் குறைந்த இரத்த அழுத்த நோயும் ஏற்படுகிறது.

சில சமயங்களில் மனம் அதிக உணர்ச்சி வசப்படும் போது இரத்தம் வேகமாக உள்வாங்கி வெளியேறுகிறது. இதனால் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. இதனை சித்தர்கள் பித்தவாத அழுத்தம் என்கின்றனர்.

மனித உடலில் அமைந்துள்ள பித்த நீர் அதிகம் சுரந்து வாத நீருடன் கலந்து பித்த வாத அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதைத்தான் உயர் இரத்த அழுத்தம் என்கிறோம். அதே நிலையில் உடற் கூறுகளுக்குத் தகுந்தவாறு வாத நீர் அதிகம் சுரந்து பித்த நீருடன் சேரும்போது வாத பித்த அழுத்தம் ஏற்படுகிறது. இதையே குறைந்த இரத்த அழுத்தம் என்கிறோம்.

இரத்தத்தில் அதிகளவு கொழுப்புச் சத்துக்கள் இருந்தால் அவை இரத்தக் குழாய்களில் படிந்து இரத்தத்தில் அழுத்தம் அதிகரித்து இரத்த அழுத்த நோய் ஏற்படுகிறது.

பொதுவாக கோபம், கவலை, அச்சம் உள்ளவர்களை இரத்த அழுத்தம் அதிகம் தாக்குகிறது. உடல் வலியும் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். தூக்கமின்மையும் இரத்த அழுத்தத்தை உண்டாக்கும்.

பெற்றோர்களில் யாராவது ஒருவருக்கு இரத்த அழுத்த நோய் இருந்தால் அது குழந்தைகளுக்கும் வர 25 சதவிகிதம் வாய்ப்புள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

### உயர் இரத்த அழுத்த நோயாளிகளின் உணவுக்கட்டுப்பாடு

இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உணவில் உப்பை குறைத்துக் கொள்ள வேண்டும்.

சர்க்கரை, இனிப்பு பண்டங்களை உட்கொள்வதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

குளிரூட்டப்பட்ட பானங்கள், செயற்கை வர்ணம் அல்லது வாசனை கலந்த உணவுகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

தகரத்தில் அடைத்த, பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்ணக்கூடாது. வெண்ணெய், நெய், கிரீம், மாமிசம் போன்ற கொழுப்புச் சத்து நிறைந்த பொருட்களை தவிர்ப்பது நல்லது.




# தாயின் மனநிலையே சேயின் மனநிலை

தாயின் ஒவ்வொரு மாற்றமும் கருவில் இருக்கும் குழந்தைக்கும் ஏற்படும். உடலாலும், மனதாலும் கருவுற்ற பெண்ணிற்கு சிறு பாதிப்பு என்றாலும் அது குழந்தையின் வளர்ச்சியில் பல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

சில குழந்தைகள் 2 அல்லது 3 வயது வரை எந்த பாதிப்புமில்லாமல் வளரும். ஆனால் திடீரென்று காய்ச்சல் வரும். பின் அந்தக் குழந்தையின் இடுப்புப் பகுதிக்குக் கீழ் செயலிழக்க ஆரம்பிக்கும். இதன் காரணத்தை அகத்தியர் தன்னுடைய பாலவாகடத்தில் தெளிவாகக் கூறியுள்ளார்.

அதாவது ஒரு பெண் எப்போது கருவுறுகிறாளோ அன்றிலிருந்து அந்தப் பெண்ணிற்கு உண்டாகும் மாற்றங்கள் கருவிலிருக்கும் குழந்தைக்கும் உண்டாகும். இவ்வாறு ஏற்படும் பாதிப்புகள் அல்லது மாற்றங்கள் குழந்தை பிறந்த பின் 2 அல்லது மூன்று ஆண்டுகள் வளர்ந்த பின் கூட ஏற்படும்.

ஒரு குழந்தை முழுமையாக வளர்ச்சியடையவும் எதிர்காலத்தில் மனதாலும் உடலாலும் ஊனமில்லாமல் பிறந்து வளரவும் கருவுற்ற பெண்கள் சில நடைமுறைகளைக் கடைப்பிடித்து வர வேண்டும்.

- கருவுற்ற பெண்கள் குளிர்ந்த நீரில் குளிக் கக்கூடாது. ஈரத் தலையுடன் இருப்பதை தவிர்ப்பது நல்லது.
- குளிர்ந்த காற்று, வாடைக்காற்று, பனிக்காற்று வீசும் இடங்களில் நிற்கக் கூடாது. ஜன்னல் ஓரம் அதிக நேரம் நிற்கக் கூடாது.
- மழையிலோ மழைச் சாரலிலோ நனையக்கூடாது. அவ்வாறு நனைய நேரிட்டால் வீட்டிற்கு வந்தவுடன் வெந்நீர் வைத்து இளம் சூடான நீரில் குளித்து உடலையும் தலையையும் நன்கு துடைக்க வேண்டும்.
- எப்போதும் நன்கு காய்ச்சி ஆறிய நீரைப் பருகுவது நல்லது. அதிக நீர் அருந்த வேண்டும். அதற்காக ஒரே நேரத்தில் அதிக நீர் அருந்தக்கூடாது. இடைவெளி விட்டு நீர் அருந்த வேண்டும்.
- அதிக சூடான நீரை அருந்துதல் நல்லதல்ல. குளிர்சாதனப் பெட்டியில் வைத்த குளிர் பானங்கள், குளிர்ந்த நீர் மற்றும் குளிர்ந்த உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும். இதனால் சளிப் பிடிக்காமல் பார்த்துக் கொள்ளலாம். கருவுற்ற பெண்ணுக்கு சளிப் பிடித்தால் அது கருவில் இருக்கும் குழந்தையைப் பாதிக்கும்.
- கருவுற்ற பெண்கள் சிலபேர் குமட்டல் வாந்தி காரணமாக உணவை தவிர்ப்பார்கள். அப்படி தவிர்ப்பதால் குழந்தைக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போகும்.
- அதிக காரம், புளிப்பு உள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும். எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உண்ண வேண்டும்.
- சத்து மாத்திரைகளை நேரடியாக உபயோகிக்கக்கூடாது. கீரைகள், பழங்கள், தானியங்கள், காய்கறிகள் போன்றவற்றில் தேவையான சத்துக்கள் அனைத்தும் கிடைக்கின்றன.

சத்து மாத்திரைகளை உபயோகித் தால் அவை சில நேரங்களில் தாயின் உடல் சமநிலைப்பாட்டை மாற்றி கருவில் உள்ள குழந்தையை பாதிக்க ஆரம்பிக்கும். இதனால் குழந்தைகள் பிறந்து சில நாட்கள் நன்றாக இருந்து பின்பு பாதிப்பை ஏற்படுத்தும். சில குழந்தைகளுக்கு உடல் உறுப்புகள் பாதிக்கப்படும்.

- மதிய உணவில் ஏதாவது ஒரு கீரையை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக சூடு, அதிக குளிர்ச்சி தரும் பழங்களைத் தவிர்த்து மற்ற பழங்களைச் சாப்பிடுவது நல்லது. ஜூஸ் செய்து கூட அருந்தலாம்.
- கர்ப்பிணிப் பெண்கள் சரியான நேரத்திற்கு உணவு அருந்த வேண்டும். உணவு உண்டவுடன் தூங்கக்கூடாது. சற்று ஓய்வெடுத்தாலே போதுமானது. முடிந்தவரை பகல் தூக்கத்தைத் தவிர்ப்பது நல்லது.




மனதைப் பாதிக்கும் காட்சிகளைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

- மழை, இடி, மின்னல் ஏற்படும் போது வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதுபோல் அதிக வெயிலிலும் அலையக் கூடாது. மூச்சு திணறும் அளவு மக்கள் நெருக்கடி உள்ள திருவிழா, கடை வீதிகளுக்கு செல்வது நல்லதல்ல.
- அதிக சப்தம் போட்டு பேசுவதால் வயிற்றில் உள்ள கருவிற்கு சில அதிர்வுகள் ஏற்பட வாய்ப்புண்டு.
- இரவு நேரங்களில் அதிக வெளிச்சமில்லாத பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.
- கரு என்பது மென்மையான பூ போன்றது. அதை அழகாக பாதுகாப்பாக பெற்றெடுக்க வேண்டியது ஒரு தாயின் கடமை.
- மிதமான வேலை, மிதமான நடை, மிதமான உடற்பயிற்சி, அமைதியான மனநிலையே ஆரோக்கிய குழந்தைக்கு முதல் படியாகும்.

# விடுமுறை தூக்கம் ; பருமனைக் குறைக்கும்

பரபரப்பு மிகுந்த இன்றைய சூழலில் பெரியவர்கள் மட்டுமல்ல மாணவர்களும் இயந்திரகதியில்தான் இயங்க வேண்டியுள்ளது.



பள்ளிக்கூடங்கள் மட்டுமின்றி பல்வேறு சிறப்பு வகுப்புகள், டியூசன்கள் என அடுத்தடுத்து அவர்களுக்கும் கடமைகள் காத்திருக்கின்றன.

சனி, ஞாயிறு போன்ற விடுமுறை தினங்கள்தான் அவர்களுக்கு சற்று ஆறுதல் அளிக்கும். ஆனால் அந்த நாட்களிலும் கூட அவர்களால் காலை வெகுநேரம் வரை தூங்கமுடியாது. அதுவே வழக்கமாகி சோம்பேறி ஆக்கிவிடும், உடல் பருமனுக்கு வழிவகுத்துவிடும் என்று கருதி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வெகுநேரம் தூங்க விடுவதில்லை.

இந்த கணிப்பு முற்றிலும் தவறானது என்பது சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. 5 ஆயிரம் குழந்தைகளிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவில், வாரவிடுமுறை நாட்களில் கூடுதல் நேரம் தூங்கிய மாணவர்கள் உடல் பருமன் பிரச்சினையில் இருந்து விடுபட்டு 'ஸ்லிம்' மாக இருப்பது கண்டறியப்பட்டது.

மேலும் அவர்கள் புத்துணர்ச்சி பெறவும் இந்த விடுமுறை தூக்கம் உதவியது என்பது தெரியவந்தது. இந்த ஆய்வை ஹொங்கொங்கில் உள்ள சீனப் பல்கலைக்கழகம் நடத்தியது.

எனவே, உங்கள் குழந்தைகளின் விடுமுறை தூக்கத்திற்கு இனி பச்சைக்கொடி காட்டுங்கள். இதன்மூலம் அவர்களின் உடல் பருமன் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவதுடன், அவர்களை புத்துணர்ச்சி ஆக்கிக் கொள்ளவும் வழிவகுக்கும்.

# பார்வை இழப்பை தடுக்கும் சாமந்திப் பூக்கள்



பார்வை இழப்பை தடுக்கும் சக்தி மஞ்சள் நிற சாமந்தி பூக்களுக்கு இருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை லண்டனை சேர்ந்த ஓய்வு பெற்ற கண் மருத்துவர் ஹாரி மன்ஸ்லாண்ட் (வயது 73) வெற்றிகரமாக மேற்கொண்டார். இவரது வலது கண் பார்வை முழுவதும் பறிபோனது. இந்த நிலையில் மற்றொரு கண்ணிலும் பார்வை பாதி அளவு குறைந்தது. எனவே இவர் நடமாட மிகவும் சிரமப்பட்டார்.

தமது மனைவியின் உதவியுடன் தான் தனது அன்றாட பணிகளை மேற்கொண்டார். தனது கண்பார்வையை மீண்டும் பெற பல சிகிச்சைகள் மேற்கொண்டார். பலன் எதுவும் இல்லை.

மஞ்சள் நிற சாமந்தி பூக்களால் மட்டுமே இழந்த தனது கண்பார்வை கிடைக்க வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்தார். அந்த பூக்களில் உள்ள விற்றமின்களின் மூலம் மாத்திரை தயாரித்தார்.

அந்த மாத்திரைகளை தொடர்ந்து சில மாதங்கள் சாப்பிட்டு வந்தார். என்ன ஆச்சரியம். இழந்த தனது கண்பார்வையை அவர் மீண்டும் பெற்றார்.

# 2010 புத்தாண்டு பலன்கள்

## மகரம்

**(உத்தராடம் 2ஆம், 3ஆம், 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் முதலாம், 2ஆம் பாதங்கள் வரை)**

**பொருளாதார நிலை உயரும்!**

நினைத்ததை அடைய நிதானத்தைக் கடைப்பிடிக்கும் மகர ராசி நேயர்களே!

புத்தாண்டு பிறந்துவிட்டது. 'பொன்னவன்' என்று வர்ணிக்கப்படும் குரு உங்கள் ராசிக்கு இராண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, பொருளாதார நிலை சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு உயரும். புதிய தெம்போடும், உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள்.

நவக்கிரகங்கள் நல்ல நிலையில் இயங்கினால், வாழ்க்கைப் பாதை சீராகும். அல்லாத நிலையில் இயங்கும் பொழுது நாம் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டில் ஏற்படும் குருவின் வக்ர காலத்திலும், சனியின் வக்ர காலத்திலும், செவ்வாய் சேர்க்கை காலத்திலும் நீங்கள் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டும்.

மற்ற காலங்களில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடும். உற்றார், உறவினர்கள் உறவையும், பகையையும் மாறி மாறி உருவாக்குவர்.

விரய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் பலம் பெறுவதால், வரவில் முக்கால்வாசி செலவாகும் சூழ்நிலை உண்டு. கேது, சந்திரனோடு இணைந்து ஆண்டு தொடங்குவதால் சர்ப்ப சாந்தி செய்து கொள்வதன் மூலம் மன அமைதி கூடும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அவை இணைந்து செயற்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து, வணங்கி, பரிகாரங்கள் செய்து யோக பலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். நிலையான வருமானமும் அமையும்.

பெயரியல் முறையில் எண்கணித அடிப்படையில், சனி சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்ச நிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்த்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், எதிர்காலம் இனிமையாக அமையும். குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**01-01-2010 முதல் 30-04-2010 வரை**

இக்காலம் உடன் பிறப்புக்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய காலமாகும். குடும்பச் சுமை கூடும். பண வரவு திருப்திகரமாக அமைந்தாலும், இனம்புரியாத கவலை மேலோங்கும்.

இல்லம் தேடிவரும் விருந்தினர்களிடம் கவனமுடன் இருப்பது நல்லது. 4,11இற்கு அதிபதியான செவ்வாய் வக்ரம் பெறுவதால் சொத்துக்களை விற்பனை செய்யும் சூழ்நிலை உருவாகும்.

இருப்பினும், எதிர்பார்த்த இலாபம் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டினால் மருத்துவச் செலவுகள் குறையும்.

குரு பார்வை உங்கள் ராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, எதிர்ப்புகள் அகலும், எதிரிகள் விலகுவர். கடன்சுமை குறைவதற்குப் புதிய வழி பிறக்கும். எப்படியாவது, யாருடைய பணமாவது உங்கள் கைகளில் புரளும் என்பதால், அப்போதைக்கு அப்போது நிவாரணம் தேடிக் கொள்வீர்கள்.

பன்னிரெண்டுக்கு அதிபதியான குரு இரண்டில் சஞ்சரிப்பதால், விரயத்திற்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். நாளைய தினம் ஒரு செலவு இருக்கிறது என்றால் இன்று இரவே உங்களுக்குப் பணம் வந்து சேரும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

சனியின் வக்ர இயக்கமும் இக்காலத்தில் நடைபெறுகிறது. ராசிநாதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. திடீர் திடீரென ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டு அகலும், தொழில், உத்தியோகத்தில் திருப்தி ஏற்படாது.

உடனிருப்பவர்களால் உபத்திரவங் கள் வந்து சேரலாம். சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற நீங்கள் சாதுரியமாகப் பேசி பகையை உறவாக்கிக் கொள்வது நல்லது. இக்காலத்தில் வைரவர் வழிபாடு வளர்ச்சியைக் கொடுக்கும்.

**01-05-2010 முதல் 31-08-2010 வரை**

இக்காலத்தில் 3, 12இற்கு அதிபதியான குரு வக்ரம் பெறுகிறார். எனவே சகோதரர்களால் சச்சரவுகள் உருவாகலாம். சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்ப உறுப்பினர்களின் நலனில் அதிக அக்கறை காட்டினாலும் அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்கள். பல எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாகாமல் நிற்கும்.

இக்காலத்தில்தான் மீன ராசியில் குருவின் சஞ்சாரம் ஏற்படுகிறது. அதன் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிவாகிறது. இதன் விளைவாக சில நல்ல பலன்களும் உங்கள் இல்லம் தேடி வந்து சேரும். குருவின் பார்வை பலத்தால் வாயில் தேடி வரன்கள் வந்து சேரும்.

இராசிநாதன் சனி என்பதாலும், குடும்ப ஸ்தானாதிபதி செவ்வாய் என்பதாலும் பொருத்தம் பார்த்து செய்யும் திருமணத்தால் வருத்தமில்லாத வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொள்ள இயலும். தாய்வீடு சென்ற களத்திரம் தானாகவே வந்து சேரலாம். வாழ்க்கைத் துணைவழியே வந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக அகலும்.

பங்காளிப் பகை மாறும். தந்தை வழியில் வந்த உடன் பிறப்புக்களால் எந்த உதவியும் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இனி சிந்தை மகிழும் விதத்தில் சில உறவுகளால் நன்மை கிடைக்கப்போகின்றன. பூர்வீகச் சொத்து தகராறுகள் அகலும், மனமாற்றம் ஏற்பட்டு மகத்தான காரியங்களைச் செய்ய குருவின் பார்வை உங்களுக்குப் பலன் கொடுக்கும்.

இலாபஸ்தானத்தை குரு பார்ப்பதால் பொருளாதார நிலையில் இருந்த தேக்க நிலை அகலும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புக் கிட்டும். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வெளிநாட்டு முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வியக்கும் விதத்தில் செய்திகள் வந்து சேரும். அரசியல்வாதிகளுக்குப் புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம்.

குருவின் பார்வையைப் பலப்படுத்த தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட்டு வாருங்கள். அருகில் இருக்கும் சிவாலயத்திற்குச் சென்று நவக்கிரகத்தில் இருக்கும் குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**01-09-2010 முதல் 31-12-2010 வரை**

இக்காலத்தில் குருவின் வக்ரம் செயற்படுவதால் விரயங்கள் கூடலாம். தொட்ட காரியங்கள் எல்லாம் இரண்டு முறை செய்யும் சூழ்நிலை ஏற்படும். இம்மாதத்தில் கூட்டுக்கிரக யோகம் செயற்படும் விதத்தில் கிரகங்களும் உலா வருகின்றன.

குறிப்பாக செவ்வாயும், சுக்ரனும் துலாம் ராசியில் இணைகிறார்கள். அது மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். பெண் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். மாற்றுக் கருத்துடையோரின் மனம் மாறும்.

அக்டோபர் மாதத்தில் சூரியன், புதன், சுக்ரன் மூன்றும் அதே துலாம் ராசியில் இணைகிறார்கள். 8, 9, 10இற்கு அதிபதிகள் இணைவதால் திடீர் விரயங்கள் உருவாகலாம்.

நண்பர்களால் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடலாம். பொறுப்புக்களை உங்கள் கைக்குள்ளேயே வைத்துக் கொள்வது நல்லது. கட்டிய வீட்டால் அல்லது குடியிருக்கும் வீட்டால் பிரச்சின்னைகள் உருவாகலாம். சூரிய வழிபாடு உங்களுக்குச் சுகத்தைக் கொடுக்கும்.

இல்லம் தேடி நல்ல தகவல்கள் வந்து சேரவும், வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகவும் ஆஞ்சநேயரை வழிபட்டு வாருங்கள். அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு நன்மையும், தீமையும் கலந்த ஆண்டாகவே அமையப் போகிறது. குருவின் பார்வை பலத்தால் உடல்நலம் சீராகும் என்றாலும், இனம்புரியாத கவலை மேலோங்கும்.

குடும்பத்தில் கணவன்-மனைவி, குழந்தை, உறவினர், தாய், தந்தை, மாமியார், நாத்தனார் ஆகியோரின் பிரச்சினைகளைப் பொறுமையாகச் சமாளிப்பது நல்லது. கோபத்தைக் குறைத்து, குணத்தைக் கைக்கொண்டால் தேவைகள் பூர்த்தியாகும். மே மாதத்திற்கு மேல் திருமண முயற்சிகள் அனுகூலமாக இருக்கும்.


குரு கவசம் மற்றும் சனி கவசத்தையும் பாடி குருவையும், சனியையும் வழிபாடு செய்யுங்கள். குழப்பம் அகலும், குதூகலம் உருவாகும் (தொடரும்)

**சிவல்புரி சிங்காரம்**

---

## முன்னாள் நீதியரசரின் ஆலோசனையில் புதிய அரசியல்சாசனம் உருவாக்கப்பட்டு வருகிறது

### சோமவன்ச அமரசிங்க



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் ஆலோசனையின் அடிப்படையில் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு வருவதாக ஜே.வி.பி. கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை அவரே நேரடியாக கண்காணிப்பார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்த போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மேலும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஆட்சியின் கீழ் இலங்கையில் புதிய சகாப்தமொன்று உருவாக்கப்படும் என்றும் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் என்ற கருத்து விரைவில் தகர்த்தெறியப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு எட்டப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ள அவர் ஜனநாயகத்தை கட்டியெழுப்பி நல்லாட்சியை ஏற்படுத்துவதே தமது பிரதான இலக்கு என மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

---

## பிரபாகரன் தாயாரை பராமரிக்க வை.கோ உறுதியளிப்பு

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கு அவரது சொந்த ஊரான வல்வெட்டித் துறையில் நடைபெற்ற போது ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தொலைபேசி வழியே இரங்கல் உரை ஆற்றினார்.

பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கின் போது, ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தொலைபேசி வழியே ஆற்றிய இரங்கல் உரை ஒலி பெருக்கி மூலம் அங்கு திரண்டிருந்த மக்களிடையே ஒலிபரப்பப்பட்டது.

அவ்வுரையில், ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ அவர்கள் பிரபாகரனின் தாயாரை இந்தியாவுக்கு அனுப்ப இலங்கைஅரசு அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் அவரை தனது வீட்டில் வைத்துப் பராமரிப்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

---

## மட்டக்களப்பு மேயருக்கு எதிராக வழக்குத் தொடர திட்டம்

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவகீதா பிரபாகரனுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் கட்சியின் கீழ் போட்டியிட்டு மட்டக்களப்பு மேயர் பதவிக்கு நியமிக்கப்பட்ட சிவகீதா பிரபாகரனை அந்த பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

சிவகீதா பிரபாகரன், எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் மட்டக்களப்பு மேயர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் பின்னர் தேச நிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் அழைப்பை ஏற்றுக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்புரிமையையும் பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-6)

மனச்சாட்சியைக் கொல்லக் கூடாது. அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்!

-சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி

## சேட்டைக் கழற்றிச் சோதிக்கும் நல்லூர் முருகா! நீயே மாமன்னன்!

முருகன் தமிழ்க் கடவுள். அவனே தமிழின் மன்னன். அவன் வீற்றிருந்து அரசாட்சி புரியும் இடம் நல்லூர்.

தமிழ் மன்னன் சங்கிலியன் நல்லூரைத் தன் இராசதானியாகப் பிரகடனம் செய்ததும் தமிழ்க் கடவுள் அங்கு வீற்றிருந்ததனால் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

இத்துணை சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனைத் தரிசியாதார் எவருமிலர். நேரிலும், நினைவிலும் தரிசிக்கும் கோடான கோடி மக்களின் நாதனாக வீற்றிருக்கும் நல்லூர்க் கந்தனைத் தரிசியாத இலங்கை ஆட்சியாளர்களும் இல்லை எனலாம்.

யாழ்ப்பாணத்திற்கு எவர் விஜயம் செய்தாலும் அவர்களின் நிகழ்ச்சி நிரலில் நல்லூர்க் கந்தனைத் தரிசித்தல் முதன்மையானதாக அமையும்.

அதிலும் தேர்தல் காலங்களென்றால் வேட்பாளர்கள் நேர்த்தியோடு நல்லூர்க் கந்தனிடம் வருவார்கள்.

முருகா எல்லாப் பிழையும் பொறுத்தருள் என்று உள்ளுர இரப்பார்கள். ஆனால் முருகனோ இதற்கெல்லாம் இசைபவன் அல்ல. அவன் மிகவும் நிதானமானவன். எங்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதானமிழந்து தமிழ் மக்கள் மீதான பற்றிழந்து பாவகாரியம் புரிகின்ற போதிலும்,

தமிழ் வேந்தனாய் வீற்றிருக்கும் நல்லூர் கந்தன் தன்மானத்தை என்றும் காப்பவன். தமிழ் மக்களை படையினர் எத்தனையோ வடிவங்களில் சோதனை நடத்தினர். கையை உயர்த்தி உடலைத் தட்டி அடையாளஅட்டையை பரிசோதித்து என அவர்களின் சோதனை முறை பலவாறாக இருந்தன.

இதையெல்லாம் நல்லூர் முருகன் பொறுத்திலன். இவற்றுக்கெல்லாம் அவன் பாடம் புகட்டினான். ஜனாதிபதி முதல் இந்த நாட்டின் இராணுவத் தளபதிவரை எவர் வந்தாலும் தங்கள் சேட்டைக் கழற்ற வேண்டும் என்று உத்தரவிட்டான்.

தமிழ் மன்னனின் உத்தரவை மீறும் தகுதி சிங்கள ஆட்சியாளர் முதல் எவருக்கும் கிடையாது.

அதனால் அவர்கள் எல்லோரும் தங்கள் சேட்டுக்களை கழற்றி விட்டே நல்லூர் கந்தகோட்டைக்குள் நுழையமுடியும்.

இந்த நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதல், இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவரை சேட்டைக் கழற்றிவிட்டே நல்லூர் மன்னனைத் தரிசித்தனர் என்றால்,

இந்த நாட்டில்- உலகின் மாமன்னன் நல்லூரில் அல்லவா வீற்றிருக்கின்றான்?

அவர்கள் எல்லாம் எங்கள் உடல்களை தட்டிச் சோதனையிட்டனர். ஆனால் நல்லூர் முருகனோ ஆட்சியாளர் முதல் வேட்பாளர் வரை எல்லோருடைய சேட்டுகளையும் கழற்றி உள்ளத்தைப் பரிசோதிக்கின்றான்.

சேட்டைக் கழற்றி விட்டு கந்தனின் திருக்கோயிலுக்குள் நுழையும் நாடாளும் ஆசையுள்ளவர்களுக்குச் சொல்லுங்கள், முருகன் உங்கள் உள்ளத்தைச் சோதிக்கின்றான் என்று.

அங்கே தரப்படும் பஞ்சாலாத்திக் கற்பூர தீபம் நீங்கள் எவருக்கும் கொடுமை செய்யவில்லை-செய்யமாட்டோம் என்பதை உறுதி செய்யும் சத்தியப் பிரமாணம் என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

உங்கள் உள்ளங்கள் தெளிவற்றவையாக இருக்கும் போது, உங்கள் சத்தியம் தோற்கும் போது நல்லூர் மன்னன் தகுந்த பாடம் புகட்டுவான்.

இருந்தும் முருகனிடமும் ஒரு கவலை. முருகா உன் கவலைக்கென்ன காரணம்? வினவினேன்.

தமிழ்மக்கள் இத்துணை துயரங்களை அனுபவித்தும், இதுவரை எந்த உரிமையும் கிடைக்காமல் இருக்கும் போதும், தமிழ் மக்களின் பொது நலன் பார்க்காமல்-தங்கள் சொந்த நலன் பார்க்கும் தமிழரை நினைத்துத்தான் கவலை என்றான் முருகன்.

முருகா! தமிழனால்தான் தமிழனுக்குக் கவலை. தமிழனால்தான் தமிழனுக்குக் கண்ணீர்.

நீயே! பார்த்துக் கொள் என்றேன். முருகன் சோகமாகச் சிரித்தான். இதைத் தமிழ் வாக்காளர்களிடம் சொல் என்றான்.

தமிழ் வாக்காளர்கள் அற்ப சொற்பங்களுக்கு ஆசைப்பட்டால் மீண்டும் பழைய நிலை என்றான். ஏற்றுடுக தமிழ் மக்களே! முருகன் கூறிய அறிவுரையை, மீண்டும் அவலக் குழிக்குள் விழாமல் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

# தடுப்புக்காவலில் உள்ள புலிகளை உடனடியாக விடுவிக்கப்போவதில்லை

## அரசு அறிவிப்பு

தடுத்து வைத்துள்ள விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படும் பல ஆயிரம் பேரை தாம் விடுதலை செய்யப் போவதில்லை என எரிபொருள் சக்தித்துறை அமைச்சர் டபிள்யூ. டி.ஜே செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் தடுத்து வைத்துள்ள 14 ஆயிரம் பேரில் பெருமளவான தற்கொலை குண்டுதாரிகள் உள்ளனர். எனவே அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முடியாது. அவர்கள் அனைவரும் பல்வேறுபட்ட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையை ஓரம்கட்ட அனைத்துலக சமூகம் முயல்கின்றது. அற்காகவே போர்க்குற்றச்சாட்டுக்களை அவர்கள் முன் வைத்துள்ளனர். இலங்கை மீது நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் வேண்டும் என மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தாம் 12 ஆயிரம் பேரையே தடுத்து வைத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். அவர்களில் 712 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் தற்போது 11 ஆயிரம் பேர் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் தாம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதும் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் அனைவரும் விடுதலை செய்யப் படுவார்கள் என்ற உறுதிமொழியை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவியை விடுதலை செய்ய மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

விடுதலைபுலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள பேராதனைப் பல்கலைக்கழக மாணவி துவாரகாவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரத்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். அப்படியில்லையாயின் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்த கருணா என்று அழைக்கப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரனும் கைது செய்யப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு சொன்னார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த மாணவி புலிகளிடம் தற்கொலை குண்டுதாரிக்கான பயிற்சி பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமை பாரிய மனித உரிமை மீறலாகும் என்றும் உதுல் பிரேமரத்தின குற்றம் சாட்டினார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் யார் தொடர்பை பேணியிருந்தாலும் அவர்களை கைது செய்யாதீர்கள். முன்னர் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுங்கள். இதன் மூலம் மீண்டுமொரு பிரிவினைவாத சக்தி உருவாவதை தடுக்க முடியும் என்றும் அவர் கூறினார். அப்படி இல்லையேல் மீண்டும் ஒரு ஈழப்போராட்டம் வெடிக்கும் நிலை ஏற்படும் எனவும் உதுல் பிரேமரத்தின எச்சரிக்கை விடுத்தார். (ச-5)

# மாணவர்களுக்கான உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்கான உணவு விநியோகத்தினை மேற்கொள்ளும் பொருட்டு உரிய ப.நோ.கூ. சங்கங்களுக்கு களஞ்சியங்களில் இருந்து உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவினால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே ப.நோ.கூ. சங்கங்கள் பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் 14ஆம் திகதிக்கு முன் உணவுப் பொருட்களை உரிய பாடசாலைகளிற்கு விநியோகித்து முடிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். மேலும் பாடசாலை அதிபர்கள் உரிய ப.நோ.கூ.சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப் பொருள் விநியோகத்தை துரிதப்படுத்தி மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கலை சீரான முறையில் மேற்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# கடந்த வருடத்தில் 940 போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிப்பு

## -குற்றப்புலனாய்வு திணைக்களம்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் ஆயிரம் ரூபா, இரண்டாயிரம் ரூபா பெறுமதியான 940 போலி நாணயத்தாள்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயம் தொடர்பான விசாரணைப் பிரிவு குறிப்பிட்டது.

இதன் பிரகாரம் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 800 உம் 2000 ரூபா போலி நாணயத்தாள்கள் 140உம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் புதிதாக வெளியிடப்பட்ட ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 212 உம் அடங்குவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டது.

கடந்த வருடம் 500 ரூபா போலி நாணயத்தாள்கள் 128 உம் 100 ரூபா போலி நாணத்தாள்கள் 141 உம் 50 ரூபா போலி நாணயத்தாள்கள் 67 உம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

போலி நாணயத்தாள்கள் அச்சிடும் 8 இடங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சுற்றி வளைத்ததுடன் மேலும் 6 சுற்றி வளைப்புகள் வெவ்வேறு பொலிஸ் நிலையங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் போது அச்சு உபகரணங்களுடன் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 50 பேருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-3)

# மக்கள் வங்கியின் கல்விக் கௌரவிப்பு

வடமராட்சி கல்வி வலயப் பகுதிக்குள் க.பொ.த. சாதாரண தரத்தில் 2007 பரீட்சையில் 10 ஏ பெற்ற மாணவர்களையும் 2008 இல் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வுகள் தைப் பொங்கல் தினமான நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 2.30 மணியளவில் பருத்தித்துறை மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்படும் என பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இத் தகவலை பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். மேலும் தைப்பொங்கல் தினமான அன்று மாணவர்களுக்கான சிசு உதான மற்றும் ஏனைய கணக்குகளில் வைப்புக்களை மேற்கொள்வதன் மூலமாக எதிர்கால சுபீட்சமான வாய்ப்புக்களுக்கும் வழி கிட்டும் என்பதையும் அறியத்தருகிறோம்.

தைப் பொங்கல் தினத்தன்று காலை 10.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை வங்கி வைப்புக்களை ஏற்க திறந்திருக்கும் என்பதனையும் அறியத் தருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கல்வியும் சமுதாயமும்



'மக்கட் பேற்றாலோ செல்வத்தாலோ அல்ல; தியாகத்தால் மட்டுமே அமர நிலை அடையப்படுகின்றது' என்ற இந்த அறை கூவலை உபநிஷதங்கள் காலம் முதல் உலகிற்கு நாம் விடுத்து வந்திருக்கின்றோம்.வாழையடி வாழையாக , இனத்திற்குப் பின் இனமாக பல இனங்கள் இந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டன.ஆசைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வாழ்க்கைப் புதிரைத் தீர்க்க தங்களால் ஆனவரையிலும் அவை முயற்சி செய்தன. ஆனால் அவை எல்லாம் தோல்வியையே அடைந்திருக்கின்றன.

பழைய இனங்கள் எல்லாம் பொன்னாசை, அதிகார வெறி வளைவாகிய கொடுமை, துன்பம் முதலியவற்றின் சுமை தாங்க முடியாமல் ஆகியவற்றின் சுமை தாங்க முடியாமல் அழிந்தே போயிருக்கின்றன. புதிய இனங்களோ அதே சுமைகளால் தள்ளாடி விழும் நிலையில் இருக்கின்றன.

# எமக்கு பாரிய பலமாக —

# த.தே.கூட்டமைப்பின் ஆதரவுள்ளது

## ரவி கருணாநாயக்க



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளராக போட்டியிடும் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு அளிக்கின்றமையானது பாரிய பலமாக அமைந்துள்ளது. நாங்கள் வழங்கும் வாக்குறுதிகளை நிறை வேற்றுவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மக்கள் எம்மீது பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர். அம்மக்களின் அடிப்படை தேவைகளை நாங்ள் நிறை வேற்றுவோம். ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கான மக்கள் ஆதரவு தற்போது நாளுக்கு நாள் அதிகரத் துக்கொண்டு வருகின்றது.

அத்துடன் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறான கொள்கை பிரகடனம் ஒன்றை அவர் முன்வைத்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாது என்று சில தரப்புகள் கூறிவருகின்றன. ஆனால் நாங்கள் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கிக் காட்டுவோம்.

மக்களின் வரிச் சுமையை குறைத்து விட்டே இவ்வாறான அதிகரிப்புக்களை வழங் குவோம் என்பதனை தெரிவிக்கின்றோம். வேலையின்மை வீதத்தை குறைப்பதற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன் வைப் போம். தொழிலற்றவர்களுக்கு மாதம்2000 ரூபாவை வழங் தவதற்கான செயற்திட்டங்களை முன்வைக்கவுள்ளோம். மிகவும் சவாலான விடயங்கள் என்றாலும் நாங்கள் அவற்றை செய்து காட்டுவோம். அதற்கான பொருளாதார முகாமைத் துவ திட்டங்கள் எம்மிடம் இருக்கின்றன என்றார். (2-6)

# சீரழிந்துசெல்லும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## வவுனியா அ.இ.மு.காங்கிரஸ் அமைப்பாளர்

அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழ்த் தேசியத் தலைவர்களுக்கும் தமிழ் மக்க ளுக்கு அரசியல் ஆலோசனை கூற முற்பட் டிருப்பது வேடிக்கையாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சிதறடித்து விட்டு அடுத்தவர்களுக்கு ஆலோ சனை கூறுவது நகைப்பிற்குரிய விடயமா கும் என் அகில இலங்கை முஸ்லிம் காங் கிரஸ் அமைப்பாளர் ஜனாத் முத்து முகமது தெரிவித்துள்ளார்.வவுனியாவில் ஆதரவா ளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் களைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று இருக்கும் நிலையை யாவரும் அறிவார். கடந்த 10 வருட காலத் தில் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் மறைந்த பின் இலங்கை முஸ்லிம்களுக்கு எவ்வாறான சேவைகள் செய்தேன் என்று எடுத்துச் சொல்ல ஹக்கீம் ஏதாவது வைத்தி ருக்கின்றாரா? ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொன்னதைச் செய்கின்றார். சொல்வதையே செய்கின்றார்.

அரசியலில் பேரம்பேசி ஆட்சியாளர் களை யும் அரசாங்கத்தையும் வெறுப்பு உண்டாக் கும் ஹக்கீம் ஜனாதிபதி செய்த சேவையை எள்ளி நகையாடுகிறார். கையிருப்பு இருந் தால் தான் பொருட்களை விற்க முடியும் சாத னை புரிந்தவர்கள் தான் விளம்பரம் பண்ண முடியும். இலங்கையின் முஸ்லிம்கள் இவரது தலை மையில் வேதனையைத் தான் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள் என்றார்.(2-6)

# ஆட்சிமாற்றம் ஏற்படாவிட்டால் இலங்கை எதியோப்பியாவாக மாறும் நிலை ஏற்படும்

## -சரத் பொன்சேகா-

(கொழும்பு)

ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படாத பட்சத்தில்



இன்னும் இரு பது வருடங் களில் இலங் கை எதியோப் பியா, சோமா லியா போன்ற நாடாக மாறி விடும் என ஜனா திபதி பொது வேட்பாளர் சரத் பொன் சேகா தெரிவித்துள் ளார்.

ஆட்சி மாற்றம் ஏற்படாமல் தொடர்ந்தும் இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்குமாக இருந்தால் இன்னும் 15, 20 வருடங்களில் எமது பரம்பரையினர் வாழ்வதற்கான நாடு ஒன்று இல்லாது போகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 2ஆயிரம் வருடங்களுக்கு முன் னர் இந்து சமுத்திரத்தில் காணப்பட்ட ஒரு காட்டுத்தீவைப் போல இலங்கை மாறும் அபாயம் இருப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் ஒருவரை ஒருவர் கொன்று கொள்ளை அடித்து பிழைப்பு நடத்த வேண் டிய நிலை ஏற்பட்டு விடும் எனக் குறிப்பிட்ட அவர் அவ்வாறான ஒரு நிலைக்கு இலங் கையை உட்படுத்திவிடக் கூடாது எனவும் இதற்கு ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என வும் கோரியுள்ளார்.

இதேவேளை நாட்டு மக்கள் அனைவரும் தற்போதைய நிலையிலேயே சரத் பொன் சேகாவை ஜனாதிபதியாக தெரிவு செய்து விட் டதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலா ளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும்15-20 நாட்களில் நாங்கள் பெருமளவிலான சாவல்களுக்கும் அச்சுறுத்தலுக்கும் இலக்காக வேண்டியிருப் பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறா யினும் இந்த தேர்தலில் தாங்கள் வெற்றி பெறு வது உறுதி என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (2-6)




### மஹிந்தவின் தேர்தல் அறிவிப்பு

# திருக்கேதீஸ்வரம் புனித ஸ்தலமாக பிரகடனம்

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கேதீஸ வரர் ஆலயம் புனரமைக்கப்பட்டு ஆலயப் பிரதேசம் புனிதநகராகப் பிரகடனம் செய்யப் படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அறிவிப்பை கடந்த சனிக்கிழமை விடுத் தார்.

மன்னாருக்கு கடந்த சனிக்கிழமை சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக மன்னார் ஆயர் அதி. வண.இராயப்பு ஜோசப் மற்றும் சிலரு டன் கலந்துரையாடிய பின்னர் அங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

அதில் தற்சமயம் திருக்கேதீஸ்வரர் ஆல யம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

புனரமைப்பு முடிந்த பின்னர் அந்த ஆல யத்துக்கு செல்லும் வீதியை போக்குவ ரத்துக்கு திறப்பேன். அந்தப் பிரதேசத்தை புனித நகராகப் பிரகடனம் செய்வேன் என்று கூறினார்.

மேலும் கடற்றொழில்ாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க நட வடிக்கை எடுக்கப்படும் என்றும் மஹிந்த கூறியுள்ளார். (2-6)

# பொன்சேகா-த.தே.கூட்டமைப்பு இணக்கப்பாட்டில் மங்கள அதிருப்தி

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் ஏற் படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடு தொடர் பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரி வின் தலைவர் மங்களசமரவீர அதிருப்தி அடைந்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சி கூட்டமைப்பின் ஸ்தாபக உறுப் பினரான மங்கள சமரவீர அண்மைய நாட்க ளாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடு படவில்லை என அந்த செய்தியில் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கட்சியின் புலி ஆதரவு கொள்கைகள் தொடர்பில் மங்கள சமரவீர எதிரான கருத்துக்களை கொண் டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


இவ்வாறான ஓர் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜெனரல் சரத்பொன் சேகா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளமை மங்கள சமரவீரவை அதிருப்திடையச் செய் துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் இல் லத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தாக மங்கள சமரவீரவின் நண்பர் ஒருவரை மேற்கோள்காட்டி குறித்த ஆங்கில ஊடகம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. (2-6)

# மஹிந்தவின் அரியாசனத்தில் பொன்சேகாவை அமர வைப்போம்

## தம்பர அமில தேரர்

(கொழும்பு)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரியாசனத்தில் ஜெனரல் சரத்பொன்சேகாவை இம்முறை அமரவைப்போம் என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலின்போது உயிரைப் பணயமாக வைத்து மஹிந்த ராஜபக்ஷவை தாம் ஆட்சிப்பீடமேற்றியதாகவும் ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி காரணமாக நாடு பாரிய அழிவுகளை எதிர் நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று கொடிய யுத்தத்திலிருந்து நாட்டைப் பாதுகாத்த ஜெனரல் சரத்பொன் சேகா, மக்க ளின் புண்ணியத்தினால் அவதரித்த வீரர் என்றும் நாட்டை ஊழல் மோசடிகளிலிருந்து மீட் டெடுப்பது அவருக்கு சுலபமான காரியம் எனவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# தமிழர்களின் சுயத்தை வெளிப்படுத்தவே தேர்தலில் தனித்து போட்டியிடுகிறேன்

## -சிவாஜிலிங்கம்-

(கொழும்பு)


இனப்பற்றுள்ள எந்தத் தமிழனும் எதிர்க் கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆத ரிக்கமாட்டான். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்துவதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பின ரும் ஜனாதிபதி வேட்பாளருமான எம்.கே. சிவா ஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய எந்தத் திட்டமும் இர்ாணுவத் தளபதியிடம் இல்லை. இறுதிவரை யுத்தம் நடத்திய ஓர் இராணுவத் தளபதியைத் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிப்பது துர்ப்பாக்கியம் என் றும் தேசிய தொலைக்கா ட்சியொன்றுக்கு வழங் கிய பேட்டி யில் அவர் தெரி வித்துள்ளார்.



திருகோண மலையில் ஓர் இ ரா ணு வ அதிகாரி அர சாங்க அதி பராக இருந்த போது வடமாகாணத்துக்கு ஓர் இராணுவத் தள பதியை நியமித்தபோது எதிர்ப்பு தெரி வித்த சம்பந்தன் நாட்டின் தலைவராகும் ஜனாதிபதி தேர்தலுக்கு முகம்கொடுக்கும் ஓர் இராணுவத் தளபதிக்கு ஆதரவு தெரி விக்க முன் வந்தமை மக்களைத் தவறாக வழி நடத்தும் முடிவாகும்.

தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தி கள் நடப்பதை மறுக்க முடியாது. இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் சுயத்தை வெளிப் படுத்தவே தனித்துப் போட்டியி டுகிறேன் என்றும் சிவாஜிலிங்கம் மேலும் கூறினார். (2-6)


யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதியின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பிள்ளைகளுக்குப் பால்மாப் பைக்கெற்றுக்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# இந்திய அணிக்கு மூன்றாவது வெற்றி; சொந்த மண்ணில் பங்களாதேஷ் சோகம்



(மிர்பூர்)

விராட் ஹோலியின் சிறப்பான சதத்தின் மூலம் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இத் தோல்வியுடன் பங்களாதேஷ் அணி தான் விளையாடிய 4 போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரிலிருந்து விடைபெற்றது.

பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் பங்களாதேஷில் நடைபெறுகின்றது.

இத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை, இந்திய அணிகள் ஏற்கனவே முன்னேறிய நிலையில் தொடரின் 6-வதும் இறுதியுமான முதல் சுற்றுப் போட்டியில் நேற்று இந்திய-பங்களாதேஷ் அணிகள் மோதின.

மிர்பூரில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 247 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் 97 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 85 ஓட்டங்களையும் மாமுடுல்லா ஆட்டமிழக்காமல் 80 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 64 ஓட்டங்களையும்,

ரகிபுல் ஹசன் 28 ஓட்டங்களையும் இஸ்லாம் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி விராட் ஹோலியின் அதிரடியான சதத்தின் மூலம் 43 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 249 ஓட்டங்களைக் குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் விராட் ஹோலி ஆட்டமிழக்காமல் 95 பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 102 ஓட்டங்களையும் காம்பீர் 41, கார்த்திக் 34, அணித் தலைவர் தோனி 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் நயீம் இஸ்லாம் 2 விக்கெட்டுக்களையும் சபீயுல் இஸ்லாம், சகீப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 4 புள்ளிகளைப் பெற்றது. இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு வழியமைத்த விராட் ஹோலி ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை பங்களாதேஷ் அணி தான் விளையாடிய 4 போட்டிகளிலும் தோல்வியடைந்து சொந்த மண்ணில் சோகத்துடன் விடைபெற்றது.

இத் தொடரின் இறுதிப் போட்டியில் நாளை இலங்கை-இந்திய அணிகள் மோதுகின்றன.

# சுற்றுலா மையமாகி வரும் பிரபாகரனின் வாசஸ்தலம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையிலுள்ள வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாசஸ்தலம் மீண்டும் சுற்றுலா மையமாகியிருக்கின்றது. அரசு, புலிகளுக்கிடையிலான கடந்த கால சமாதான காலப் பகுதியில் கணிசமானவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வல்வெட்டித்துறை ஆலடியிலுள்ள அவரது வாசஸ்தலத்தை நேரில் சென்று பார்வையிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் மீண்டும் ஏ-9 வீதியூடாக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் பயணிக்கின்ற நிலையில் முக்கிய சுற்றுலா மையமாக வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாசஸ்தலமும் அமைந்திருக்கின்றது.

நாள்தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் வாகனங்களில் வந்து அவரது வாசஸ்தலத்தைப் பார்த்துச் செல்வதாக அப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக அங்கு செல்லும் பலர் தமது நினைவுகளை அங்கு பொறித்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-5)

# செய்தித் தாள்களுக்கு எதிராக பொன்சேகா சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா சில செய்தித் தாள்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளார்.

தமது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் வகையில் எட்டுச் செய்தித் தாள்கள் தகவல் வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவதூறு ஏற்படும் வகையில் செய்திகளை வெளியிட்ட எட்டு செய்தித் தாள்களுக்கு ஏற்கனவே நிபந்தனைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளர்அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்தும் சட்ட ஆலோசனை திரட்டப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சில அரசியல் தலைவர்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அவதூறு ஏற்படும் வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசார அணி வலுவிழந்துள்ளதாகவும் இதனால் எதிர்க்கட்சிகளின் மீது சேறுபூசுவதனை பிரதான நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

# நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும்...

கைத்தொழிற்றுறை, வீடமைப்பு, மின்சாரம், விவசாயத்துறை, மீள்குடியேற்றம், வடக்குக்கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத் திட்டங்கள், வடக்குக்கிழக்கிற்கான பூரண அபிவிருத்தித் திட்டங்கள், சுகாதாரம், முதியோர் நலன், வீதி அபிவிருத்தி, கல்வித் துறை, தொலைத் தொடர்பு வளர்ச்சி, மீன்பிடித்துறை, வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் அடங்கலான சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டன.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வடக்கிலும் மாகாண சபை நிறுவப்பட்டு அப்பகுதியும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு நேரடியாக இணைக்கப்படும்.

கௌரவமான சமாதானத்தை உருவாக்க சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். அதற்காக ஐக்கிய இலங்கையைப் பாதுகாக்கும் வகையில் மக்கள் ஆணையை உச்ச அளவில் பலப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பில் திருத்தம் செய்யப்படும். பெரும்பாலானவர்களின் இணக்கத்துடன் நிரந்தர சமாதானம் உருவாக்கப்படும்.

**வீடமைப்பு**

படை வீரர்கள், இடம்பெயர்ந்த மக்கள், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோர், அரச ஊழியர்கள், தனியார் துறையினர் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் அடங்கலான சகலருக்கும் எதிர்வரும் 6 வருட காலத்தில் அரசாங்கத்தின் பங்களிப்புடன் வீடுகளை நிர்மாணிக்கும் பாரிய திட்டத்தை முன்னெடுப்பேன்.

**மின்சாரம்**

எதிர்வரும் ஆறு வருட காலத்தினுள் மின் கட்டணத்தைக் குறைக்கவும் மின்சார வசதியற்ற சகலருக்கும் மின்சார வசதி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**விவசாயம்**

பசளை நிவாரணம், ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காகவும் வழங்க நடவடிக்கை எடுப்பேன். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் விவசாயத்துறையை மேம்படுத்தி நாட்டில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத் துவது எனது கொள்கையாகும்.

**சுகாதாரம்**

உள்நாட்டில் மருந்து உற்பத்தியை மேம்படுத்துவதும் மருந்து இறக்குமதியை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுப்பேன். மருத்துவத்துறை அடங்கலான சேவைகளுக்கு மேலும் வசதிகள் அதிகரிக்கப்படும்.

**மீன்பிடித்துறை**

மீன்பிடித்துறை ஊக்குவிக்கப்படும். எமது நாட்டைப் போன்று 23 மடங்கு கடற்பகுதி எமக்கு உரித்தாக உள்ளது. இங்குள்ள இயற்கை வளங்களை நாட்டிற்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

**தேசத்திற்கு வளமானதொரு எதிர்காலம்!**

❖ ஆசியாவின் வியப்புக்குரிய ஐங்கேந்திரங்களின் மையமாக.

❖ உற்பத்தி நிறைவால் பஞ்சம் பசியகன்ற சுபீட்சமான தேசம்.

❖ வீடு, மின்சாரம், நீர், தொடர்பூடக வசதிகள். சகலருக்குமான தேசம்.

❖ நவீன வீதிக்கட்டமைப்பு, போக்குவரத்துச் சேவை கொண்ட தேசம்.

❖ ஒழுக்கமானதும், சட்டத்தை மதிப்பதுமான தார்மீக சமூகம்.

❖ வென்றெடுத்த தேசம் மீண்டும் பிளவுபடாத ஒரே நாடாக.

❖ பெரும்பாலானோரின் இணக்கத்துடன் உருவாகும் நிரந்தர சமாதானம்.

❖ மரம் செடி கொடிகளையும் ஜீவ ராசிகளையும் காக்கும் பசுமைத் தேசம்.

❖ இளைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கும் சாதகமான தேசம்.

❖ விண்ணையும்-மண்ணையும் இணையவெளியால் வெற்றி கொள்ளும் எதிர்கால தலைமுறை.

❖ மேலைத்தேய, கீழைத்தேய மருத்துவத்தை இணையாகப் பயன்படுத்தும் நோயற்ற மானுட சமூகம்.

❖ தேசிய வளங்கள் மற்றும் அறிவினைக் கொண்டு உலகை வெற்றிக்கொள்ளும் தேசிய தொழிற்துறையாளர்.

❖ இலக்கியத்துறையும் ஆற்றுகைக்கலைகளும் பொங்கிப் பிரவகிக்கும் ஒரு யுகம்.

❖ மனிதர்கள் விட்டுச்செல்லும் நாடாக இல்லாது திரும்பிவரும் நாடாக.

தோற்கடிக்கப்பட முடியாது எனக்கருதிய பயங்கரவாத்தையும், பிரிவினைவாதத்தையும் நாம் முறியடித்தோம்.

சுதந்திரமான எம் தாய் நாட்டின் பொறுப்பாளர்கள் என்றவகையில் இழந்து போன சுபீட்சத்தை மீண்டும் வெற்றிகொண்டு எம் தேசத்தையும் பிள்ளைகளையும் ஒளிமய மான எதிர்காலத்தை நோக்கி அழைத்துச் செல்வதற்காக கைகோர்த்துச் செயற்படுவோம். (ச-3,5,14)

## ஜனாதிபதியின் பாரியார்...

யுத்த நடவடிக்கைகள் காரண மாக தமது குடும்பத் தலைவர்களை மற்றும் பிள்ளைகளை இழந்தவர்களை அவர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

வழமை போலவே காணாமல் போன தமது குடும்பத் தலைவர்கள் மற்றும் பிள்ளைகளைத் தேடித் திரியும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவர் மூலமாகவும் விடிவு கிட்டலாம் என்ற நம்பிக்கையில் அங்கு திரண்டு காணப்பட்டனர்.

குடாநாட்டில் இருக்கின்ற பெண்ணிய அமைப்புகள் சில இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. சிராந்தி ராஜபக்ஷ அவர்களுடன் நீண்ட உரையாடல்களை மேற்கொண்டிருந்தார். எனினும் அவர் சொல்லிக் கொள்ளத்தக்க எந்தவொரு உறுதி மொழியையும் வழங்கியிருக்கவில்லை.

இதனிடையே அங்கு சென்றிருந்த வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற சிறார்களுக்கு சிறு உணவுப் பொதிகளைக் கொண்ட பொட்டலங்களையும் அவர் கையளித்தார்.

எனினும் அவர் யாழ்ப்பாணத் தில் வேறு இடங்களில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஊடகவியலாளர் திஸ்ஸ...

எழுதியதாக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று 50 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையில் செல்ல அனுமதித்த கொழும்பு மேல் நீதிமன்றம், திஸ்ஸநாயகத்தின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் கையளிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது.

பிணை அனுமதி வழங்கப்பட்ட ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தை இன்று மேல்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவர் பிணையில் செல்லத் தேவையான ஏற்பாடு களை மேற்கொள்ளவுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனக்கெதிராக விதிக்கப்பட்டுள்ள 20 வருட கடூழியச் சிறைத் தண்டனைக்கு எதிராக திஸ்ஸநாயகம் சமர்ப்பித்த மேல் முறையீட்டு மனுவைவிசாரணைக்குஎடுத்துக் கொள்ளவும் மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது. ச-14)


## நியூ சிற்றி ரேடர்ஸ் இடமாற்றம்

சொனி, பனசொனிக், சொனிக்கா, ரேடியோ, கசற் ரெக்கோடர், சொனி, பைனியர், ஆரென் கார் ரேடியோ, கார் சிடி பிளேயர், ஸ்பீக்கர், சொனி, பனசொனிக் LG 14", 17", 21", கலர் T.V, டிஸ் ரி.வி, கிரோகோல்ட் ரிசீவர், அம்பிளியயர், வூபர்ஸ், பவல்ஸ், சொனி, பனசொனிக் LG, இன்ரெக்ஸ், ரெக்னோரொச் DVD பிளேயர், ஸ்ரப்ளைசர் 500, 1000, 1500, 3000 வட்ஸ், சார்ச் லைற், சார்ச் ரோச், கிறைண்டர், ரைஸ் குக்கர், ரோஸ்ரர், அவன், எலக்ரிக் கேத்தல், கொட் பிளைட், காஸ் குக்கர், அயன், பிரசர் குக்கர், மண்ணெண்ணெய் அடுப்புகள், சுவர் மேசை, ஸ்ராண்ட் சுவரை மின் விசிறிகள், சுவர் கை, மேசை மணிக்கூடுகள், ரீபிளார்க், ரோச் மற்றும் மிக்ஸி எலக்ரோனிக் உதிரிப் பொருட்களையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

T.P.:- 021 222 3226

(C-4201)


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சோமசுந்தரம்

(விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் முன்னாள் உபசெயலாளர்)



நுணாவில் மேற்கு மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சோமசுந்தரம் 11.01.2010 திங்கட்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மூளாயைச் சேர்ந்த நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்னம்மா (அமரர்), மகேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

ஜெகதீஸ்வரி, நிர்மலா, பாலச்சந்திரன், பாரதி (ஆசிரியை, யா/ நுணாவில் .கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), சௌந்தரவல்லி (சுவிஸ்), இராமச்சந்திரன் (இ.போ.ச.பருத்தித்துறை), நாகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலசுந்தரமூர்த்தி, மகேந்திரன், ஜெயமதி, சிவனேசன் (இ,போ.ச.கோண்டாவில்), ஜெயாநந்தன் (சுவிஸ்), வசந்தகுமாரி (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ராஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சைலஷா (சுவிஸ்), சுகன்ஜா (லண்டன்), நிரோஜன், துவாரகன், கௌசிகன், கௌதமன், கௌதமி, ஷங்கவி, ஜானுசன், கபிலன், அகிலன், குபேரன், மீரா (சுவிஸ்), மாயா (சுவிஸ்), ரஜீபனா, மிதுசா, சுயானா (ஜேர்மனி), சீதன் (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), யோகானந்தம் (சுவிஸ்), சந்திரசேகரம் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் கஜீவன் (சுவிஸ்), நர்த்தனா (சுவிஸ்), சஜீவன் (சுவிஸ்), சமீரா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மாலை 3.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
T.P.:021 321 3299, 021 321 9016

தகவல்
குடும்பத்தினர்.

(340)

## கூட்டமைப்பு எடுத்த...

உறுப்பினர்கள், யாழ். ஆயர், யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட பல தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடினோம்.

இக் கலந்துரையாடல்களின் போது நாம் எமது முடிவை எடுத்தது தொடர்பில் விரிவாக எடுத்துக் கூறினோம். குறிப்பாக அரசு, எதிர்க்கட்சியின் அழைப்பை ஏற்று நாம் முன்வைத்த விடயங்கள் தொடர்பிலும் அதில் அரசு பின்னடித்தமை, ஜெனரல் சரத் பொன்சேகா ஏற்றுக் கொண்டமையையும் எடுத்துக் கூறினோம்.

இதனை ஏற்றுக் கொண்ட புத்திஜீவிகளும், பொது அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவை பாராட்டினர். இதேவேளை யாழ். ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆகியோரை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியமை குறித்து, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் நேற்றுத் திங்கட்கிழமை ஆயர் இல்லத்தில் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடினர்.

சுமார் ஒரு மணித்தியாலமாக இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக ஜெனரல் சரத் பொன்சேகாவுடனும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பல தடவை கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் குறித்து கடும் போக்குடன் செயற்படுவதாகவும் இரா. சம்பந்தன் ஆயரிடம் எடுத்துக் கூறினார். ஜனாதிபதி மகிந்தவை விட சரத் பொன்சேகா பல விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்ததாகவும் ஆயரிடம் இரா.சம்பந்தன் சொன்னார். கூட்டமைப்பின் இச் செயற்பாடுகளை பாராட்டிய ஆயர், ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கு இது நல்லசந்தர்ப்பம் என்றும் சுட்டிக்காட்டினார் என கூட்டமைப்பினர் தெரிவித்தனர். (ச-5)


## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுவாமி வேதாந்த ஆனந்தா ஸ்ரீ சாரதா பிரம்மவித்தியா கேந்திர குன்னூர் கல்லூர் ஆச்சிரம பொறுப்பாளர் சுவாமி சின்மையானந்தரின் சீடரின் ஆன் மீகச்சொற்பொழிவு இன்று தொடக்கம் எதிர்வரும் 5 நாட்களுக்கு மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை நல்லூர் இராகவேந்திரா மடாலயத்தில் நடைபெறும். (ச)


## தபால் மூல வாக்களிப்பு...

வாக்காளர்கள் எதிர்வரும் 26ஆம் திகதி வரை வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டை விநியோகம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்தது. வாக்காளர் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கும் தபால் நிலையங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும் விநியோக நடவடிக்கை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுபெறும் என்றும் திணைக் களம் அறிவித்துள்ளது. வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தும் வாக்காளர் அட்டை கிடைக் காதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு பின்னர் உரிய ஆதாரங்களுடன் அருகிலுள்ள தபால் நிலையங் களுக்கு சென்று விசாரித்துக் கொள்ளலாம்.

தபால் மூல வாக்களிப்பை கண்காணிப்பதற்கு பவ்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மத்தியநிலையம் ஆகியவற்றுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழில் கப்பம் பெற்ற குழுவுடன்...

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் காணாமல் போனவர்களை மீட்டுத் தருவதாகத் தெரிவித்து கிராம சேவையாளர்கள் ஊடாக தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி பல இலட்சம் ரூபாய் பணத்தை கப்பமாகப் பெற்றது தொடர்பில் அரியாலையைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 6 பேர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இம் முறைப்பாடு தொடர்பில் உடன் விசாரணை மேற்கொள்ளுமாறு யாழ். பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம். அஜந்த சமரகோன், யாழ். பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜி.எச். மாரப்பன ஆகியோர் இணைந்து யாழ். விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலி ஸாருக்கு உத்தரவிட்ட னர்.

இதனையடுத்து யாழ். விசேட குற்ற விசாரணைப் பிரிவைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் முறைப்பாட்டில் கிடைத்த தொலைபேசி இலக்கத்தை வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஆரம்பக்கட்ட விசாரணை களில் கிடைத்த தகவல்களின்படி கப்பம் பெற்ற பணம் வவுனியா மக்கள் வங்கியில் வைப்புச் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட இரு பொலிஸாரும் வவுனியாவுக்குச் சென்று மக்கள் வங்கியின் சம்பந்தப்பட்ட கணக்குவைத்திருந்த பெண்ணை கடந்தமாதம் 30 ஆம் திகதி வவுனியா பூவரசன் குளம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணின் வங்கிக் கணக் குக்கு 11 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது.

இதில் பிரஸ்தாப பெண் 10 இலட்சம் ரூபாய் பணத்தை மீளப்பெற்றுள்ளார். வவுனியா பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் 3 பெண் பிள்ளைகளின் தாயாவார்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப பெண்ணை கடந்த 5ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்றில் நீதிவான் அ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட நீதவான் பிரஸ்தாப பெண்ணை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், அத்துடன் குற்றச்சாட்டப்பட்டவரின் வங்கிக் கணக்கை நிறுத்தி வைக்குமாறு வவுனியா மக்கள் வங்கி முகாமையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை யாழ். விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-5)

## விசாரணையின்றி தடுத்து...

எண்ணிக்கையிலானோருக்கே வழக்குப் பதிவு செய்ய வேண்டியுள்ளதாகவும் ஏனைய அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் சட்டமா அதிபர் கூறினார்.

சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அடங்கலாக 600 பேர்வரை விடுதலை செய்யப்படவுள்ளதாக கூறிய அவர், கைதிகளின் விடுதலை தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்துவருவதாக கூறினார்.

வழக்குகள் எதுவும் இன்றி தடுத்து வைக் கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக 11 பேர் கொண்ட சட்டத்தரணிகள் குழு ஆராய்ந்து வருகின்றது. இதன்படி மிக குறைவானோருக்கே வழக்குப் பதிவு அவசியமாகுவதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை என சட்டமா அதிபர் கூறினார்.

நாட்டின்பல்வேறு சிறைச்சாலையிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் 577 பேர் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு, மகசீன், சீ. ஆர்.பீ, வெலிக்கடை, யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய சிறைச்சாலைகளில் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

அவர் களில் சிலர் தளர்வ டைந்ததாகவும் அவர்களை மருத்துவச் சிகிச்சைக்கு உட்படுத்தியிருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## வலி. வடக்கு உயர்...

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன் தினம் வந்திருந்த போது வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள எனது சகோதரியின் வீட்டை பார்வையிடு வதற்குச் சென்றேன்.

நான் தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலய சோதனைச் சாவடிக்குச் சென்றபோது அங்கிருந்த சிப்பாய் தனது கொமாண்டர் உடன் கதைத்துவிட்டு உள்ளே நுழைய அனுமதி வழங்குவதாகத் தெரிவித்தார்.

ஆனால் அந்த சிப்பாயின் அறிவிப்பை அடுத்து அப்பகுதிக்கு பொறுப்பான மேஜர் தர அதிகாரி அங்கு வந்து என்னை விசாரித்தார்.

மேஜரிடம் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர், உயர் பாதுகாப்பு வலய பகுதியில் உள்ள எனது சகோதரியின் வீட்டை பார்வையிட வந்துள்ளேன் எனத் தெரிவித்தேன்.

நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் உள்ளே நுழைவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வேண்டும் என அவர் என்னிடம் தெரிவித்தார்.

அதற்கு நான், அரசாங்கம் இன்று முதல் பாதுகாப்பு வலய பகுதியில் உள்ள தமது சொந்த இடங்களுக்கு மக்கள் செல்ல முடியும் என அறிவித்துள்ளது என நான் கூறினேன். அதற்கு, ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரசியல்வாதிகள் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கலாம். ஆனால் உயர் பாதுகாப்புவலயங்களை நீக்கி மக்களை குடியமர்த்துவது உடனடிச் சாத்தியமான விடயமல்ல.

ஒருவேளை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றால் உள்ளே விடமுடியும் என்றார்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார். (ச-5)






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.